
# தமிழ் முரசு

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்

முரசு: 3 ஒலி: 5




TAMOUL MOURASSOU

பங்குனி 1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு - 41

## விமர்சனங்களைத் தவிர்ப்போம் வேறுபாடுகளைக் களைவோம்.

எமது பாசபூமியாகிய ஈழதேசம் சிறீலங்கா அரசினால் பிணக்காடாக்கப்பட்டு விட்டது. ஈழ மக்களின் உயிர்களுக்கும், உரிமைகளுக்கும், உடமைகளுக்கும் சிறீலங்கா அரசு மரண ஊர்வலங்களை நடத்த ஆரம்பித்துவிட்டது. ஆக்கிரமிப்புப் படைகள் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்ற மனிதவதைகளும் அரசினால் திட்டமிட்டு ஈழதேசத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பஞ்சமும் தினந்தோறும் மரிக்கின்ற மக்களின் எண்ணிக்கையை நூற்றுக்கணக்கிற்கு நகர்த்தத் தொடங்கிவிட்டது. எஞ்சியிருக்கும் மக்கள் தமது உயிரைக் காப்பாற்ற உயிரிலும் மேலான பாசபூமியை விட்டு அகதிகளாக வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் கூட தமது உயிர்களைத் துச்சமாக மதித்து, விடுதலையை விட வேறொன்றும் தேவையில்லை என்ற உறுதியுடன் ஈழதேசத்தை ஆக்கிரமித்து அடிமைப்படுத்த முயலும் வெறிபிடித்த சிறீலங்கா படைகளுக்கு எதிராக பல முனைப்படுத்தப்பட்ட தாக்குதல்களையும் ஈழ விடுதலை இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்கள் தொடர்ந்து நிகழ்த்திவருகிறார்கள். விடுதலைப் போராளிகளின் தொடர்ந்த, சக்திவாய்ந்த இத்தாக்குதல்கள் ஈழத்தை ஆக்கிரமித்திருக்கும் சிறீலங்கா படையினருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பாதிப்பு ஆக்கிரமிப்புப் படைகளுக்கு உடல் ரீதியாக மாத்திரமன்றி மனோவியல் ரீதியாகவும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈழமக்களின் பிரச்சனைகளுக்கு துப்பாக்கி முனையிலே தீர்வு காண முற்பட்ட சோவனிச சிறீலங்கா அரசுக்கு அது பேசுகின்ற பாஷையிலேயே துப்பாக்கிகளால் இன்று பதிலளிக்கத் தொடங்கியிருக்கும் ஈழப் போராளிகளின் சமீபத்திய தாக்குதல்கள் ஈழப்போராட்டத்திற்கு ஒரு புதிய சர்வதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்த்தை அளித்துள்ளது. இந்தக் கட்டத்தில் ஈ.பூ மக்களின் உயிர்களைக் குடிக்கும், ஈ.பூ பூமியை மயானக் காடாக்கும் சிறீலங்கா அரசபடைகளுக்கெதிரான சகல தாக்குதல்களையும் நாம் நிபந்தனையின்றி ஆதரிப்பதுடன் அனைத்து இயக்கங்களது துப்பாக்கிகளும் பொது எதிரியை நோக்கித் திருப்பப் படவேண்டும் என வேண்டுகிறோம்.

அதே வேளையில் இந்தக்கட்டத்தில் தமது சுயநலங்களுக்காக இயக்கங்களிடையே பேதங்களை வளர்க்கும் சுயநலமிகளை இயக்கங்களும், ஈ.பூ மக்களும் இனங்காணவேண்டுமென்றும் வேண்டுகிறோம். இத்தகையவர்கள் இன்று ஐரோப்பாவில் ஏராளமாக மலிந்துள்ளார்கள். இவர்கள் இயக்கங்களைப் பாவித்து தமக்கு சக்தி சேர்க்க முயல்பவர்கள். இயக்கங்களைப் பாவித்து சமூகவிரோதச் செயல்களைப் புரிபவர்கள். இயக்கங்களின் ஐக்கியம் எங்கே தமது அரசியல் சுகபோகத்தை அஸ்தமனம் ஆக்கிவிடுமோ என்ற அச்சத்தில் ஒவ்வொரு இயக்கங்களின் செயற்பாடுகளையும் கொச்சைப் படுத்தியும் கேவலமாக விமர்சித்தும் இயக்கங்களிடையே பேதங்களை வளர்க்க முற்படுகின்றனர். ஈ.பூத்தில் இன்று சகல இயக்கங்களின் போராளிகளிடையேயும் அடிப்படையில் ஏற்பட்டுவரும் ஐக்கியம் எங்கே நாளை அனைத்து இயக்கங்களையும் ஓரணியில் திரட்டி ஒரு புரட்சிகர அத்தியாயத்தைப் புரட்டிவிடுமோ என்ற அச்சம் காரணமாகத்தான் இந்தப் புல்லுருவிகள் இவ்வளவு வேகமாக தங்கள் சதித்திட்டங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இவர்கள் விரைவில் தோலுரித்துக் காட்டப்படுவார்கள்.

எம்மைப் பொறுத்தவரையில் எமது நிலைப்பாடு உறுதியானது. சிறீலங்கா அரசுக்கெதிரான சகல தாக்குதல்களையும் நாம் ஆதரிக்கிறோம். இயக்கங்களின் போராட்ட நடவடிக்கைகளை நிபந்தனையின்றி நியாயப்படுத்துகிறோம். இயக்கங்கள் இணைய வேண்டியதை வலியுறுத்துகிறோம். இதற்குத் தடையானவர்களை இனங்காட்டுவோம். ஈ.பூ மக்களின் விடுதலையே... ஈ.பூ தேசத்தின் மீட்பே இறுதியானது என்பதில் உறுதியானவர்களாவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த வெள்ளத்தில் தோய்கின்ற ஈழதேசம்

ஆக்கிரமிப்புக்குள்ளான தேசம் இன்று சுமக்கின்ற அத்தனை காயங்களையும் சுமந்து இன்று இரத்தத்தில் தோய்ந்து நிற்கின்றது ஈழதேசம். இறந்தகாலமும் இழந்துபோன எங்கள் பூமியில் மனித உரிமைகளுக்கு சிறிலங்கா ஆக்கிரமிப்பாளர்கள் மரண ஊர்வலம் நடத்தியதைப் பார்த்திருந்தோம். இன்றோ மனிதர்களின் சடலங்களை எரிக்க மயானம் கூடக்கிடைக்காத நிலைக்கு தமது சொந்தபூமியிலேயே ஈழமக்கள் தள்ளப்பட்டு விட்ட கொடிய நிலையைப் பார்க்கிறோம். பயம் - பஞ்சம் - பசி - பட்டினி - நோய் - மரணம் இவைதான் இன்று ஈழமக்களின் அன்றாட சுவாசங்கள். மூச்சுக்காற்றை இழுத்து விடுவதற்குக் கூட சிறிலங்கா ஆக்கிரமிப்பாளரிடம் அனுமதிப் பத்திரம் வாங்கவேண்டிய அவலநிலைக்கு எமது தேசமக்கள் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள்.

இந்தநிலையில் நடந்த நடக்கின்ற இரத்தம் தோய்ந்த நிகழ்வுகள் சிலவற்றை எமது மக்களின் இரத்தத்திலே தோய்த்து தொகுப்போம். எமது பாவ பூமியில் இன்று பசியும் பஞ்சமும் மக்களை வாட்டி வதைக்கிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இல்லை. விளைவு பட்டினி மனித உயிர்களைச் சூறையாடத் தொடங்கிவிட்டது. மக்கள் மாத்திரமல்ல ஆடு, மாடு, கோழிகள் கூட செத்து விழத் தொடங்கிவிட்டன. அகதிகளானவர்களைக்கூட அக்கொறையாளர்கள் விடவில்லை. தமது உயிர்களைக் காப்பாற்ற அகதிகளாக படகுகள் மூலம் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற அப்பாவிமக்கள் பலர் சிறிலங்கா கடற்படையின் துப்பாக்கிகளுக்கு இரையாகியுள்ளனர். அவர்களது இரத்தம் தோய்ந்து பாக்கு நீரிணையை சிவப்பாக்கி விடுகின்றது. தப்பியோடுபவர்க்குத்தான் இக்கதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்றால் ஈழத்தில் அகதிகளாக இருப்பவர்களது நிலையோ அதைவிட படுமோசம். நெல்லுக்குளியிலுள்ள 17 அகதிகள் முகாம்களில் வாந்திபேதி நோய் 20க்கும் மேற்பட்ட உயிர்களைக் குடித்துவிட்டது. அரசபடைகள் 132 பேரைக் காணமல் போகச் செய்துவிட்டன. இதில் மூன்று சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வழமை போல ஈழ தேச இளைஞர்கள் 'பூஸா' வதைமுகாமுக்கு இழுத்துச் செல்லப்படுவதும் அங்கே பலர் தப்பிஓட முனைந்ததாக கூறிச் சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர்கதைதான்.

4.01.85 அன்று யாழ். அரசடிவீதியில் ஓய்வு பெற்ற ஆசிரியரும் வேறு இருவரும் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். இதேதினம் நல்லூரில் நாகேஸ்வரம்பிள்ளை என்பவரும் இன்னுமொரு இளைஞனும், செம்மணிவீதியில் ஒரு லொறிச் சாரதியும் அவரது உதவியாளரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். 8.01.85 அன்று குப்பிளானில் இராணுவ தேடுதல் வேட்டையின் போது மூன்று நடுத்தர வயதுள்ள குடும்பஸ்தர்கள் கொல்லப்பட்டனர். 13.01.85 அன்று யாழ். பெரியகடையில் வைத்து ஒருவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். இன்னுமொரு கொடுமையான சம்பவம் 4.2.85 அன்று நடந்தது பிரசவ வேதனையுடனை கர்ப்பிணிப் பெண் ராஜலக்ஷ்மியை சுமந்துவந்த வாகனம் இராணுவத்தால் மறிக்கப்பட்டு 66 வயதுடைய சாரதி ராமசாமி சுட்டுக் கொல்லப்பட்டார், கர்ப்பிணிப் பெண்ணும் அவரது கணவனும் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார்கள். 6.02.85 அன்று குருநகரில் இராணுவவெறியாட்டம் பலவீடுகளை சாம்பராக்கியது. குறைந்தபட்சம் 5 உயிர்களைப் பறித்தது. இதேதினம் யாழ். நகரிலும் ஆறுபேர் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். 31.01.85 அன்று மன்னார் அப்பாவி மக்கள் எட்டுப்பேர் வெறிநாய்களின் துப்பாக்கிகட்கு இரையாகினார். கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மீளக் கையளிக்கப்பட்ட பின்பு ஏறத்தாழ 107பேர் மன்னாரில் படையினரால் கொல்லப்பட்டனர். 4.2.85 அன்று வவுனியாவில் ஆறு தமிழ் கடைகள் இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன. 6.2.85 அன்று வவுனியாவில் இருவர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். 6.2.85 இல் திருகோணமலையில் 17 தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டனர். 6.02.85 இல் திரியாயில் 20 பெண்கள் படையினரால் கற்பழிக்கப்பட்டனர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

5.02.85 இல் திருமலையில் ஆக்கிரமிப்பாளரின் தேடுதல் வேட்டை மேலும் ஆறு உயிர்களைப் பலிவாங்கியது. 10.02.85 அன்று முன்னாள் மூதூர் பா.உ. தங்கத்துரை படையினரால் கைதுசெய்யப்பட்டார். மட்டுநகரிலும் இராணுவ வெறியாட்டம் எண்ணற்ற உயிர்களைப் பலிவாங்கியுள்ளதுடன் 1000க்கும் மேற்பட்டோரை - இதில் பெருமளவு பெண்களை வதைமுகாம்களுக்குள் பூட்டியுள்ளது. ஈழமக்கள் அனுபவிக்கும் கொடுமைகளை லண்டனிலிருந்து வெளியாகும் 'THE TIMES' பத்திரிகை கூறுகிறது இப்படித்தான்...




நன்றி: 'THE TIMES'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதைக்கப்படும் ஈழ மக்கள் கூறுகிறார்கள் ....

"...தென்னிலங்கையிலே வசித்தபோது அங்கிரு ந்த எமது அயலவர்களால் கொல்லப்படுவதைத் தவிர்க்க எமது சொந்த பூமிக்கு வந்தோம். இப்போது இங்கே இராணுவத்தால் கொல்லப்படுவதிலிருந்து தப்புவதற்கு நாம் எங்கே போகமுடியும்..."

"...பெரும்பாலான மக்கள் தமது வீடுகளில் படுப்ப தற்கு அச்சம் கொண்டவர்களாக இருக்கிறார்கள், அதனால் அவர்கள் பாய்களையும் தலையணைகளையும் கொண்டு காடுகளுக்குப் போகிறார்கள் படுப்பதற்கு. அங்கே அவர்கள் பயங்கரவாதிகளாகக் கருதப் பட்டு சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இதுதான் நாம் இந்த விழிப்பிட்சையை.. மக்கள் செய்கிறார்கள். ஆனால் நீ வீட்டில் இருந்தால் சுடப்படுகிறாய். நீ வெளியில் காணப்படும்போதும் சுடப்படுகிறாய். நீ ஓட முற்பட்டால் சுடப்படுகிறாய். நீ நிற்கின்ற போதும் சுடப்படுகின்றாய். இந்தக் கட்டத்தில் நாம் என்ன செய்ய முடியும்?"

இத்தனை அவலங்கள் வந்தபோதும் ஈழமக் கள் போராட்ட உறுதி கொண்டவர்களாக போரா ளிகளை நேசிப்பவர்களாக உள்ள இந்த நிலை போராட்டத்தில் ஒரு புதிய நட்சத்திரத்தை தோற் றுவித்துள்ளது.

---

தோழர்களே!

தமிழ் முரசுடனை இணைந்துத் தொடர்பு கட்டும் ......

THE EDITOR
"TAMIL MURASU"
TAMIL EELAM LIBARATION COUNCIL
10, RUE DES MARTYRS
75009 - PARIS - FRANCE.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் தமிழகம் சிறீலங்கா செய்திகள்

## சிறீலங்காவின் கடற்படைத் தளத்தின் மீது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தாக்குதல்!

11.02.85 அன்று காரைநகரிலுள்ள சிறீலங்காவின் கடற்படை முகாம் மீது பாரிய தாக்குதல் ஒன்றை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படை மேற்கொண்டது. இயந்திரத் துப்பாக்கிகள், றொக்கெட் குண்டுகள் சகிதம் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் நூறுக்கும் அதிகமான கடற்படைக் கொண்டர்கள் கொல்லப்பட்டுள்ளனர். போராளிகள் தரப்பில் இருவர் படுகாயமடைந்துள்ளார். 3 மணித்தியாலங்கள் நீடித்த இச்சமரில் சிறீலங்கா கடற்படையின் 2 பீரங்கி விசைப் படகுகளும், ஒரு ஜீப் வண்டியும் மற்றும் ட்ரக் வண்டியும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இத்தாக்குதல் தொடர்பாக சிறீலங்கா அரசு வேறுபட்ட பொய்த் தகவல்களை மாறி மாறி வெளியிட்டது. இத்தாக்குதலின்போது குருநகர், பலாலி இராணுவ முகாம்களுக்கான பாதைகளில் மக்கள் விடுதலைப்படையினரால் கண்ணி வெடி புதைக்கப்பட்டு இராணுவ வெளியேற்றமும் வெறியாட்டமும் தடுக்கப்பட்டதும் P.L.A யின் இத்தாக்குதல் வெற்றி பெறுவதற்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கமும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் மானசீகரீதியில் பெரிதும் ஒத்துழைப்பு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதல் தொடர்பாக சிறீலங்கா அரசும் அதனது அடிமை செய்தித்தாபனங்களும் தொடர்ந்து மௌனம் சாதிய போது ஈழ மக்கள் செய்தித்தொடர்பு நிலையம் (EPIC) இதனை அம்பலப்படுத்தியது. இந்திய, மற்றும் சர்வதேசப் பத்திரிகை நிறுவனங்கள் இதனை பகிரங்கப்படுத்தின. இது சிறீலங்கா கடற்படையினரின் குடும்பத்தவர்கள் மத்தியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பதட்டத்தையும் அரசின் ஆட்சியந்திரத்தில் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கம் தாக்குதல் நடந்த உண்மையை அரசை ஒத்துக் கொள்ளச் செய்தது. அரசின் இச்செயல் ஐலண்ட், சன் போன்ற பத்திரிகைகளை அரசின் மீது ஆத்திரம் கொள்ளச் செய்து இதன் காரணமாக புதிய இராணு வத் தளபதியான நளின் செனிவிரத்தினவின் பேட்டியை இப்பத்திரிகைகள் வெளியிட மறுத்ததாக பி.பி.சியின் இலங்கைபற்றிய கண்ணோட்டத்தில் 15.02.85அன்று மேர்வின் டி சில்வா கூறியுள்ளார். எப்படியிருந்த போதிலும் மக்கள் விடுதலைப் படையின் இத்தாக்கு தல் ஆக்கிரமிப்பு படைக்கு மனோரீதியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதப்படு கிறது.

## சிறீலங்கா இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்.

முல்லைத்தீவுப் பகுதியில் வெறியாட்டம் நிகழ்த்திவரும் சிறீலங்கா இராணுவத்தினரைக் கொண்ட கொக்கி ளாய் இராணுவ முகாமின்மீது 14.02.1985 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிறீலங்கா இராணுவத்தினர் 106பேர் கொல்லப்பட் டதாகவும் இராணுவ முகாம் நிர்மூலமாக்கப்பட்ட தாகவும் புலிகளின் செய்திக் குறிப்புக் கூறுகிறது. இத்தாக்குதலில் வீரமரணமடைந்த 16 விடுதலைப்புலி இயக்க வீரர்களுக்கும் எமது வீரவணக்கங்கள். இதுபோலவே 2.02.1985 அன்று பொலிகண்டியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத் துக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் சிறீலங்கா இராணுவத்தினர் 20பேர் கொல்லப் பட்டதாக புலிகளின் செய்திக் குறிப்புக் கூறு கின்றது.

## ஈழத் தேசிய விடுதலை முன்னணி.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய ஈழவிடுதலை இயக்கங்களால் ஏற்படுத்தப்பட்ட கூட்டமைப்புக்கு ஈழத் தேசிய விடுதலை முன்னணி EELAM NATIONAL LIBARATION FRONT (ENLF) எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத் தமிழ் மக்களை காக்கும் வழியை இந்தியாவே தீர்மானிக்க வேண்டுமாம் - தளபதி(?) அமிர்.

1977ம் ஆண்டு தேர்தலில் 'தமிழீழம்' பெற்றுத் தருவதாக உறுதியளித்து தமிழ்பேசும் மக்களின் வாக்குகளைப் பெற்று அதன் மேல் பதவிசுகங்களை அநுபவித்து மக்களின் உயிர்களுக்கு ஆபத்து வந்தவுடன் மக்களை நடுக்கடலில் தத்தளிக்க விட்டுவிட்ட தமிழர் கூட்டணியின் தரகு முதலாளித்துவத் தலைமை இலங்கையின் தமிழ் மக்களை படுகொலை செய்யப் படுவதைத் தடுக்க இந்தியா வங்கதேச மக்களுக்கு தந்த உதவியை அளிக்க முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. அதே வேளையில் இது வரை 80 ஆயிரம் பேர் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துவிட்டதாகவும் அடுத்த இரு மாதத்தில் இந்த எண்ணிக்கை இரண்டு லட்சமாகலாம் என்றும் கூட்டணித் தலைமை கூறியுள்ளது.

## எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமையில் தமிழகத்தில் புதிய மந்திரிசபை பதவியேற்றது.

கடும் சுகயீனத்தால் பாதிக்கப்பட்டு பின்னர் அமெரிக்காவில் சிகிச்சைப் பெற்று குணமடைந்து நாடு திரும்பிய திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் தலைமையில் தமிழகத்தின் புதிய மந்திரிசபை பதவியேற்றது. இச் சபையில் முன்னர் அமைச்சரவையில் இருந்த ஆறு மந்திரிகள் இடம் பெறவில்லை.

பதவியேற்றவுடனேயே திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சிறீலங்கா படைகளினால் நடாத்தப்படும் இனஅழிப்பு நடவடிக்கைகளையும், தொடர்ந்து பாக்கு நீரிணையில் இந்திய மீனவர்களுக்கு சிறீலங்கா கடற்படையினால் இழைக்கப்படும் தாக்குதல்களையும் வன்மையாகச் சாடினார். ஈழத்தமிழர் பிரச்சனைபற்றி விரைவில் இந்தியப்பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக அறிவித்த தமிழக முதல்வர் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தீட்சித்துடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அத்துடன் இலங்கை அரசால் சமர்ப்பிக்கப்பட்ட பாக்கு நீரிணையில் இலங்கை - இந்தியக் கடற்படையினரின் கூட்டு ரோந்து பற்றிய ஆலோசனையையும் தமிழக முதல்வர் முற்றாக நிராகரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழ விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு ஜே.ஆருக்கு ஏற்படுத்திய அச்சம்.

தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய இயக்கங்களினால் ஏற்படுத்தப்பட்ட கூட்டு முன்னணியின் நெருக்கமடைந்துவரும் தன்மையும், இதர இயக்கங்களையும் ஐக்கியத்துக்குக் கொண்டுவரும் போக்கும் பாசிசவாதி ஜெயவர்த்தனாவுக்குப் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. அவனது பயம் அவன் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் பிரதிபலித்துள்ளது. அவன் தனது உரையில் "பயங்கரவாதிகள்(?) தாக்கிவிட்டு ஓடும் உபாயங்களை மாற்றியமைத்துவிட்டு பொதுவான இராணுவப் போர் முறைத் தந்திரத்தைப் பின்பற்றப் போகிறார்கள். இதற்கான உடன்பாடு மூன்று பிரிவினர்களிடையே (TELO - EROS - EPRLF) ஏற்பட்டுள்ளது" என்றும் "இவர்கள் ஒரு பொதுவான இராணுவப் போர்முறைத் தந்திரத்தைப் பின்பற்றுவதற்கு சம்மதித்துள்ளனர். இதன் மேலும் அவர்களுக்குப் போதுமான அளவு பயிற்சி பெற்ற ஆட்களும், ஆயுதங்களும் கிடைத்ததுடன் அவர்கள் இலங்கை இராணுவத்துடன் நேருக்கு நேராகப் போர்புரியக் கூடியவராக இருப்பர்" எனவும் உரையாற்றிய ஜெயவர்த்தன 'இறுதியானதும், தீர்க்கமானதுமான போர் ஒன்றிற்கு இவர்கள் ஆயத்தங்களை செய்துவருகிறார்கள்' எனவும் 'இவர்களுக்கு உலகப் பெரும் பயங்கரவாத நிறுவனங்களுக்கும் (சர்வதேச விடுதலை இயக்கங்கள்) இடையில் தொடர்புகள் இருக்கின்றதாகவும் இந் நிறுவனங்கள் பயிற்சியளிப்பதிலும், ஆயுதங்களைப் பரிவர்த்தனை செய்வதிலும், நாசகாரியில் ஈடுபடுத்துவதிலும் உதவி செய்கின்றன' எனவும் ஜெயவர்த்தன கூறியுள்ளான்.

ஈழவிடுதலை இயக்கங்களின் ஐக்கியமே சிறீலங்கா எதிரியைத் தோற்கடிப்பதற்கான பெரும் ஆயுதம் என்பதை உணர்ந்து இந்த ஐக்கிய முன்னணியுடன் இதர இயக்கங்களும் இணைந்து ஈழப் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டுமென்பதே ஈழமக்களின் கோரிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை இயக்கங்களின் தாக்குதல்கட்கு எதிராக சிறீலங்கா அரசு பொய்ப் பிரச்சாரம்.

ஈழ விடுதலை இயக்கங்கள் தொடர்ச்சியாக ஈழத்தை ஆக்கிரமித்திருக்கும் சிறீலங்கா படைகளுக்கெதிராக நிகழ்த்தி வரும் தாக்குதல்கள் படைகளுக்கு பெரும் அழிவைக் கொடுத்துள்ளன. தமிழீழ விடுதலை இயக்கம் மேற்கொண்ட இரு பாரிய தாக்குதல்களும், தொடர்ந்து விடுதலைப் புலிகள் நிகழ்த்திய இரு தாக்குதலும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சமீபத்தில் நடத்திய தாக்குதலும் அரசுக்கு தாளமுடியாத வலியைக் கொடுத்துள்ளது. இதைத் தொடர்ந்து அரசு பத்திரிகைத் தணிக்கையை இறுக்கமாக்கியுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த சிறீலங்கா இராஜாங்க அமைச்சர் "...அரசு சம்பந்தப்பட்ட விடயங்கள் உடனுக்குடன் பத்திரிகைகளில் வந்துவிடுகின்றன. ஒரு முகாம் தாக்கப்பட்டால் அதில் எத்தனை படைவீரர்கள் இருக்கிறார்கள், என்னென்ன ஆயுதங்கள் இருந்தன என்ற விபரங்களை பத்திரிகைகள் வெளியிடுகின்றன. யுத்த சூழ்நிலைகளில் பல விடயங்களை வெளியிடக் கூடாது எனவே பத்திரிகைத் தணிக்கை அவசியமாகிறது" எனக் கூறியுள்ளார். இந்த அடிப்படையிலேயே சிறீலங்கா அரச பொலனறுவையில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் தோல்வியடைந்தது என்றும், காரைநகர் கடற்படை முகாம் மீதான தாக்குதல் சிறிய அளவிலானதே என்றும், கொக்கிளாய் இராணுவ முகாம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 4 இராணுவத்தினரே கொல்லப்பட்டனர் என்றும் பொய்ப்பிரச்சாரங்களை பாரிய அளவில் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

## முன்னாள் வவுனியா பா.உ. சுந்தரலிங்கம் காலமானார்.

வவுனியா முன்னாள் பா.உ.வும், முதுபெரும் அரசியல்வாதியும் 'அடங்காத் தமிழர்' என்று அழைக்கப்பட்டு வருபவருமான திரு. சி. சுந்தரலிங்கம் தமது 90வது வயதில் 11.02.1985 அன்று வவுனியாவில் தமது இல்லத்தில் காலமானார். இவர் தனது இறுதி உயிலில் இளைஞர்கள் ஒற்றுமைப்பட வேண்டிய அவசியத்தையும் கடந்த காலத்தில் பிழைகள் விட்டதற்கு மன்னிப்புக் கோரியும் தனது கருத்துக்களையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப் பெண்களே கிளர்ந்தெழுங்கள்



ஈழப்போராட்டம் புதிய பரிமாணங்களை தழுவிச் செல்லும் இக்காலகட்டத்தில் இப்போராட்டத்தினை நசிப்பதற்கான சகல வழிமுறைகளையும் சிறிலங்கா அரசும் அதனது ஏகாதிபத்திய எஜமானர்களும் கையாண்டு வருகின்றனர். இச்சதிகளையும், அடக்குமுறைகளையும் முறியடித்து ஈழதேசத்தை வென்றெடுப்பதற்கு அரசியல் தெளிவுடைய, திட்டமான கருத்தைக் கொண்ட ஒரு புரட்சிக் கட்சியினூடாக ஈழமக்களாகிய நாம் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியவர்களாகிறோம்.

இக்கட்டத்தில் ஈழப்பெண்களாகிய நாம் ஈழப்போராட்டத்தில் நாம் ஆற்றவேண்டிய கடமைகளை நோக்கவேண்டியவர்களாகிறோம். 'ஏதோ சில இளைஞர்கள் துப்பாக்கி தூக்குகிறார்கள். அவர்கள் அவ்வொன்றும் இவ்வொன்றுமாகத் தாக்குதல் செய்கிறார்கள் அதன் மூலம் இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் விடுதலையைப் பெற்றுத் தருவார்கள்' என்றோ அல்லது 'இந்தியாவில் இருக்கும் எங்கள் தலைவர்கள்(?) இந்திய அரசின் துணையுடன் எப்படியாவது(?) இந்தப் பிரச்சினையை தீர்த்து விடுவார்கள்' என்பது போன்ற பாமரத்தனமான சிந்தனைகளுடன் ஈழப்பெண்களே மீண்டும் நீங்கள் அடுக்களைக்குள் ஒதுங்கிவிடமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இத்தகைய சிந்தனைகளே எம்மில் பல ஈழப்பெண்களைச் சூழ்ந்திருப்பது வியப்பானதொன்றல்ல. நாம் சிறீலங்கா அரசின் அடக்குமுறைக்கு மாத்திரமல்ல எமது இனத்தைச் சேர்ந்த ஆண்களின் அடக்குமுறைக்கும் உள்ளாகிவந்தவர்கள் எமது இனத்தில் ஆணுக்குப் பெண் சமமாக வாழ்ந்து வந்த காலம் முதலாளித்துவச் சிந்தனைகளின் ஊடுருவலால் பாதிக்கப்பட்டது. ஆண் அதிகார ஆளுமை விரும்பியானான். விளைவு பெண் அடுக்களையுள் தள்ளப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டாள் பெண்களை நீங்கள் பூக்களைப் போன்றவர்கள்... மென்மையானவர்கள்... என்றெல்லாம் முதலாளித்துவக் கைக்கூலிக் கவிஞர்கள் திட்டமிட்டே பெண்களின் மனங்களைப் பலவீனப்படுத்தி ஆண்களுக்கு சரிநிகரான அவர்களது தொழில் வாய்ப்புக்களைப் பறித்து அவர்களை அழகுப்பூச்சி எடுத்துக்களில் வெளிச்சம் போட்டு அவர்களது வாழ்க்கையை இருட்டில் தள்ளினார்.

இருட்டில் தள்ளப்பட்ட ஈழப்பெண்களை சமுதாயம் சாதி, சீதனம், அந்தஸ்து விலங்குகளைப் பூட்டி அசைய விடாது பிணைத்தது. சமூக வாழ்க்கையிலே ஈழப்பெண்கள் திட்டமிட்டு தலையெடுக்க முடியாதபடி நசுக்கப்பட்டார்கள். தமிழ் பேசும் மக்களின் விடுதலையைப் பற்றி மேடையில் முழங்கிய தமிழர் கூட்டணியினர் கூட மறந்தும் பெண்களுக்கெதிரான அடக்குமுறைகளைப் பேசியதில்லை. உணர்ச்சிகரமான சொற்பொழிவுகளை மேடைகளில் பெண்கள் மூலம் நிகழ்த்த வைத்து வாக்குகளை இழுத்துக்கொண்ட தமிழர் கூட்டணி மறந்தும் கூட ஒரு தொகுதியையேனும் பெண்களுக்குக் கொடுக்கவில்லை. தன்னுடைய இனத்தவராலேயே அடக்கப்பட்ட பெண்களின் சிந்தனைகள் அடிமைத்தனமானதாய் இருப்பதைக்கண்டு எப்படி நாம் வியப்படைய முடியும்.

ஆனால் ஈழப்பெண்களே உங்களைச் சுற்றியிருக்கும் இந்தத் தற்காலிக அடிமைத் திரைகளைக் கிழித்தெறிந்து விட்டுப் பாருங்கள் எத்தகைய கோரமான... கொடிய... அடக்குமுறை இருள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றதென்று. கண்ணீரிலும், செந்நீரிலும் நமது ஈழதேசம் மிதக்கிறதென்று. உண்மையிலே சிறீலங்கா அரசின் மிருகத்தனமான அடக்குமுறை வெறியின் நேரடிப்பலி நாம்தான் ஈழப்பெண்களே. நரமாமிச வெறிகொண்டலையும் சிறீலங்கா வெறிநாய்களுக்குத் தீனி நாங்கள்தான் ஈழப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களே. அரசபடைகளின் வெறியாட்டம் அநாதை அண்ணனை, தம்பியை, கணவனை, பிள்ளையை இழந்து கண்ணீருடன் நிற்கும் பெண்கள் உங்கள் கண்களில் படவில்லையா? அல்லது 'அம்மா பசி' எனக் கேட்கும் மழலைக்கு கொடுக்க உணவில்லாமல் வயிறெரியும் தாய்மாரைக் காணவில்லையா?

கூலிப் பட்டாளங்களிடம் பெற்ற பிள்ளைகளின் முன்னாலேயே கற்பழிக்கப்பட்ட எட்டுமாதக் கர்ப்பிணி, ஆடைகள் இல்லாமலே இராணுவமுகாமில் தொடர்ந்து பல நாட்கள் சித்திரவதை செய்யப்பட்ட பெண்கள், ஒன்று, இரண்டென்று முப்பது பெண்களின் கற்பு ஒரே கிராமத்திலேயே சூறையாடப்பட்ட நிகழ்வு, பாடசாலை செல்லும் மாணவிகளின் முகங்களில் ஆக்கிரமிப்பு இராணுவம் செய்யும் 'அசிட்' அபிஷேகம், ஆங்காங்கே கண்டெடுக்கப்படும் கற்பழித்துக் கொல்லப்பட்ட இளம் பெண்களின் உடலங்கள், சிறீலங்கா இராணுவத்தால் நூற்றுக் கணக்காக பிடித்துச் சென்று சித்திரவதைப் படுத்தப்படும் ஈழப் பெண்கள் இவை அனைத்துமே ஈழப்பெண்களே எங்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அல்லவா? இவற்றைக் கண்டு நாம் பொங்கியெழ வேண்டாமா? போராட்டத்தின் பங்காளர்களாக வேண்டாமா?

உண்மையிலே இந்தச் சந்தர்ப்பத்தில் ஈழப்பெண்களாகிய எமக்கு இரு முக்கிய பணிகள் உள்ளன. ஒன்று ஈழப்போராட்டத்தில் ஆண்களுக்கு சரிநிகர் சமமாக நாமும் இருப்பது. இதன்மூலம் மாத்திரம் நாம் எதிர்காலத்தில் எமது சுதந்திர ஈழதேசத்தில் ஆணுக்கு சரிநிகர் சமமாக வாழமுடியும். எதிரியை விரட்டியடிக்கும் போராட்டப் பாதையில் எமது முழுச்சக்தியையும் அளித்து ஈழப்போராட்டத்தை முடுக்கிவிட வேண்டும். இது இரண்டாவது பணியாகும். வரலாறு நமது கண்களின் முன்னாலேயே விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பை பாலஸ்தீனம், நிக்கரகுவா, நமீபியா, சல்வடோர் போராட்டங்களில் காட்டுகிறது. அந்தவழியை ஈழப்பெண்களாகிய நாமும் தொடர்வோம். எமது பங்களிப்புக்காக காத்திருக்கும் ஈழ விடுதலை இயக்கங்களுடன் இணைவோம். அகப்பை தாங்கிய கரங்களில் துப்பாக்கியை தாங்கி சிறீலங்கா அரசுக்கு புரியும் மொழியில் துப்பாக்கியால் பேசுவோம். இனி போராட்டமுனையில் புரட்சி அத்தியாயத்தைப் புரட்டுவோம்.

- கண்ணம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய [redacted]டோனியாவில் இன அழிப்பு
# ஒரு [redacted] சதி - சில உண்மைகள்!
# [redacted]போராட்டம் தொடர்கிறது.

ஒரு புதிய அத்தியாயச் சிருஷ்டிப்பிற்கான வேலைகள் பசிபிக் பிராந்தியத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனைச் செய்பவர்கள் புதிய கலிடோனியாவின் தேசிய இனக் குழுவான கனக்கிகள் (மெலனீசியர்). சுதந்திரப் போராட்டம் ஒன்றை பிரான்சிற்கு எதிராக அவர்கள் தொடங்கியுள்ளனர். அது பிரெஞ்சு ஆதிக்கவாதிகளின் காலனித்துவ ஆளுமைக்கு நிரந்தர முற்றுப்புள்ளியை வைக்கப் போகின்றது என அரசியல் விமர்சகர்கள் இப்பொழுதே ஆருடம் கூறத் தொடங்கி விட்டார்கள்.

முதலாளித்துவத்தின் மூச்சுக்காற்றுப் பட்டுத் திணறும் மூன்றாம் உலகநாடுகளுள் புதிய கலிடோனியாவும் ஒன்று. எஞ்சியிருக்கும் பிரெஞ்சுக் காலனிகளில் இதுவும் ஒன்று. பிரான்சிலிருந்து 20 ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் பசிபிக் பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவுக்கு அண்மையில் அமைந்திருக்கும் தீவே இது. தீவின் தேசியக் குழுவான கனக்கிகளால் தீவிரப்படுத்திருக்கும் சுதந்திரப் போராட்டம் பிரெஞ்சு அரசினை ஸ்தம்பிக்க வைத்திருக்கிறது.

தீவின் மொத்த சனத்தொகை 1,45,000. அதில் 43% (60,000) கனக்கிகள், 37% கல்டோஷ் (இவர்கள் பிரான்சினால் திட்டமிட்டு இத்தீவில் குடியேற்றப்பட்ட பிரெஞ்சு மக்கள்.), 20% மானவர்கள் ஏனைய இனங்களைச் சேர்ந்த குடியேற்றக்காரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக்கினது சுதந்திரப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்று பிரான்சு கனவு காண்கிறது. கடந்த சில மாதங்களுள் இத்தீவில் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டு ஆயிரக்கணக்கான பொலிஸ், இராணுவ சிப்பாய்கள் அங்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். இந்த நடவடிக்கைகளைக் கண்டு கனக்கிகள் சிறிதும் கலங்கவில்லை. தமது போராட்டத்தை வலுப்படுத்தியிருக்கிறார்கள். அத்தோடு தற்காலிக அரசாங்கம் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

புதிய கலிடோனியாவில் நடைபெறும் போராட்டத்திற்கு ஒரு வலுவான அடிப்படை உண்டு. அந்த அடிப்படையின் ஒளியில் கனக்கிகள் தரப்பின் நியாயத்துவத்தை நாம் இனம் காணமுடியும். அத்தோடு, வரலாற்று ரீதியான ஒரு பிரெஞ்சுச் சதியின் முழுமையான, திட்டமிடப்பட்ட இன அழிப்பு, சுரண்டல் நாடகத்தையும் நாம் கண்டு கொள்ளலாம்.

18 ஆம் நூற்றாண்டுக்கு முதல் புதிய கலிடோனியா மற்றும் அதனைச் சார்ந்துள்ள கூட்டத் தீவுகளில் மேற்குச் சூரியனின் கதிர்கள் விழவில்லை. அங்கே அமைதி தவழ்ந்து கொண்டிருந்தது. மெலனீசியத் தேசிய இனம் இயற்கையோடு இணைந்த வாழ்வை நடத்திக் கொண்டிருந்தது. இத்தீவுகள் பற்றிய தகவல் 18ம் நூற்றாண்டளவில்தான் எப்படியோ மேற்குக்குத் தெரிய வந்தது. அன்றிலிருந்து மெலனீசியத் தேசிய இனத்தின் சிதைவு ஆரம்பமாயிற்று.

இரண்டு பேரால் புதிய கலிடோனியா கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் ஸ்கொட்லாந்து தேசத்தவரான கப்டன் ஜேம்ஸ் குக். மற்றவர் பிரான்சைச் சேர்ந்த புரூணி தொந்திரோக்காஸ்தோ. இவரது பயணங்களும் தனித்தனியானவை. அவர்கள் வெவ்வேறு இடங்களிலேயே காலடி வைத்தனர்.

1774 இல் ஜேம்ஸ் குக் தீவின் வடகிழக்குப் பகுதியில் காலடி வைத்தார். கனக்கிகள் அவரைப் பிடித்துத் தின்று விடவில்லை. அங்கே தான் கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்குடியினர் (கைக்கிகள்) சிறந்தப் பண்பிலும், விருந்தோம்பலிலும் சிறந்து விளங்கினர் என ஜேம்ஸ் குக் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் ஜேம்ஸ் குக் காலடி வைத்து 18 வருடங்களுக்குப் பின் தீவின் மேற்குக் கரைப் பக்கம் வந்து சேர்ந்த பிரெஞ்சுக் கப்டன் புரூணியின் தகவல் வித்தியாசமாக இருக்கிறது. நான் அங்கே கண்ட ஆதிக்குடியினர் மனிதரைப் பிடித்துச் சாப்பிடுகிறவர்களாகவும், கொடியவர்களாகவும் இருந்தனர் என அவர் கூறியிருக்கிறார். புரூணியின் தகவலை பிரெஞ்சுச் சதியின் ஓர் அம்சமாக எடுத்துக் கொள்வதே நியாயமும், பொருத்தமுமாகும்.

தீவு பற்றிய ஜேம்ஸ் குக்கின் அறிக்கை 16ஆம் லூயியிடம் 1785ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டது. லூயியின் கட்டளைப்படி இரண்டு அகழ்வாராய்ச்சியாளர்கள் தீவில் மறைந்து கிடக்கும் மூலவளங்களைப் பற்றி ஆய்வு செய்யச் சென்றனர். சென்ற இருவரும் கடலிலேயே காணாமல் போய்விட்டார்கள்.

கலிடோனியா குட்டித் தீவாயினும் பலவகை மூலவளங்களைத் தன்னகத்தே கொண்டது. 1841ஆம் ஆண்டு சந்தனமும் 1863இல் தங்கமும், 1875இல் பெருமளவு நிக்கலும் (தீவுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு - அத்தோடு உலகின் ஆகக்கூடிய நிக்கல் இருப்பு.) கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றைவிட செப்பு, கோபோல்ற், குரோமைட் ஆகிய கனிவளங்களும் அங்கு கணிசமாக இருந்தன. இந்த மூலவளங்களை இதுவரை காலமும் அனுபவித்தது போதாதென்று - காலாகாலமும் தானே அனுபவித்து தீவைச் சுரண்டித் தரை மட்டமாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தேசமக்களின் நியாயமான கோரிக்கையை பிரான்சு மறுத்துக் கொண்டிருக்கிறது.

24.01.1853 அன்று பிரெஞ்சுக் கொடி தீவில் பறக்க விடப்பட்டது. அப்போது அங்கேயிருந்த மெலனேசியக் [illegible] பலவீனத்தைப் பயன்படுத்தி சட்டரீதியான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தது பிரான்சு. அந்த உடன்படிக்கைகள் தமது வாழ்வின் உரிமையையும், நாட்டின் செல்வத்தையும் சூக்குமமாக உறிஞ்சி எடுக்கும் என்பதை குடித்தலைவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை. 1853இல் பிரெஞ்சுக்கொடி பறக்க விடப்பட்டாலும் 1860இலேயே பிரான்சின் தனிப்பட்ட காலனியாக கலிடோனியா பிரகடனம் செய்யப்பட்டது.

இன்று கனக்கிகளின் சொந்த மண்ணினை அவர்களிடமே திருப்பிக் கொடுக்க பிரான்சு மறுக்கிறது. இதற்கு காரணம், அங்கு கொண்டு சென்று பலவந்தமாக குடியமர்த்தப்பட்ட வெள்ளையர்கள்தான். இவர்களது 'அடிப்படை இலக்கும்' இங்கே கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

'அரச பயங்கரவாதத்தை' ஆயுதமாகக் கொண்ட அரசாங்கங்களில் சிறைக் கைதிகளுக்கு நல்ல 'மதிப்பு' உண்டு. ஒரு இனத்தை அழிக்க, காடைத்தனங்களைக் கட்டவிழ்த்து விட இவர்கள் பயன்படுத்தப்படுவர். இந்த வழிமுறையை சிறிலங்கா அரசு ஈழத்தில் செய்து வருவதனை அனைவரும் அறிவர். பிரான்சு இந்த அக்கிரமத்தை 120 வருடங்களுக்கு முன்னரேயே இத்தீவில் செய்திருக்கிறது.

கலிடோனியா காலனியாகப் பிரகடனம் செய்யப்பட்டபின் அங்கே பிரான்சின் சுரண்டல், இன அழிப்பு முயற்சிகளிற்குக் கைகொடுத்தவர்கள் சிறைக் கைதிகள்தாம். பிரான்சில் கொலைகள், கொள்ளைகள் குற்றச் செயல்கள் செய்து - சிறைத்தண்டனையை பெற்ற குற்றவாளிகள் கலிடோனியாவில் 'சேவை'க்காகத் திரட்டப்பட்டனர். 1864ம் ஆண்டு முதலாவது தடவையாக 248 கைதிகள் கலிடோனியாவில் வந்து இறங்கினார். அவர்கள் நிலங்களைப் பெற்றுக்கொள்ள இராணுவ உதவி வழங்கப்பட்டது.

கைதிகள் இறக்குமதி தீவில் எத்தனையோ பாதிப்பினை ஏற்படுத்தியது என்பதனை வரலாற்றாசிரியர்களான ஜோர்ஜினியா ஜொம்பஸும், நிக்சாட் அப்போல்ப்பும் தெளிவாக்கியிருக்கின்றனர். "கைதிகளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய அளவில் இறக்குமதி செய்து பொதுமக்களிடையே உலவவிட்டமை தீவு முழுவதும் குற்றங்கள் பெருக வழிவகுத்தது. வீட்டுச் சேவகர்களாக கைதிகள் பயன்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு விரைவிலேயே மறக்கப்பட்டது." என நமது நூலான 'பிரான்சின் பசிபிக் தீவுகளில்' குறிப்பிட்டுள்ளனர்.

30 வருடத்துக்குள் சுமார் 20,000க்கும் மேற்பட்ட கைதிகள் பிரான்சிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனர். 1897ம் ஆண்டு கடைசிக் கைதிக்குழு வந்திறங்கியது.

கனக்கிகளின் போராட்டம் திடீரென்று சில மாதங்களுக்கு முன்னர் வெடித்துக் கிளம்பிய ஒன்றல்ல. அந்நியர் வருகையின் தொடக்கத்திலேயே ஆரம்பமாகிவிட்டது. ஆதியில் இருந்தே தீவில் பிரான்சின் நிர்வாகத்தையும், அதனது குடியேற்ற தந்திரத்தையும் தீவிரமாக வெறுக்கத் தொடங்கினர். அந்த வெறுப்பு செயலுருவில் காலத்துக்குக் காலம் காட்டப்பட்டிருக்கிறது.

1878இன் மத்திய பகுதிகளில் ஒரு கனக்குப் புரட்சி உருவெடுத்தது. இது குடியேற்றவாதிகளான கல்டோசு, தேசியக்குழுக்களான கனக்கி தரப்பு இரண்டிலுமே பாரிய உயிரிழப்புக்களை ஏற்படுத்தியது. இப்புரட்சியில் கனக் தீவிரவாதியான அத்தாயும் அவனது மகனும் 1.09.1878இல் படுகொலை செய்யப்பட்டனர்.

இதே வேளையில் 1917இலும் ஒரு போராட்டம் உடைப்பெடுத்தது. அதிகார பூர்வமான தகவல்களின்படி இதில் 20 வெள்ளையர்களும், தீவிரவாதத் தலைவர் உட்பட 200க்கும் மேற்பட்ட கனக் போராளிகளும் கொல்லப்பட்டனர்.

இக்கட்டுரை அடுத்த இதழில் முடிவடையும்.

**கே. கே. மோகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வீர மரணம்.



F.L.N.K.S. Leader Eloi Machoro

எலொய் மாசொரோ - பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு எதிராக சுதந்திரப் போர்க்கொடியை உயர்த்தியுள்ள புதிய கலிடோனியாவின் கனக் மக்களது ஆயுதப் போராட்டத்தை தலைமை தாங்கியவன். கனக் மக்கள் உருவாக்கிய இடைக்கால அரசின் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டவன். ஆயுதங்களின் மூலம் அண்ட வந்த குடியேற்றக்காரர்கள் தீவின் தேசியக்குழுக்களை அடக்க முற்பட்ட போது குடியேற்றக்காரர்கள் பேசிய மொழியிலேயே கனக் இளைஞர்களைத் திரட்டி ஆயுத பாஷையை புரிய வைக்க முயன்ற தீரன். இவன் அரசியல் புத்தகங்களைப் படித்த வித்தகனல்ல ஆனால் கனக்கிகளின் போராட்டத்தைப் பற்றி எரியச் செய்த தீக்கனல். காலனித்துவ ஆட்சியாளர்களினதும், குடியேற்றக் காரர்களதும் நீண்ட கால இலக்கான மாசோரே போராட்டம் முனைப்படுத்தப்பட்ட கால கட்டத்தில் (12.01.1985) அரசபடைகளால் திட்டமிட்டுக் கொல்லப்பட்டான். 'எலொய் மசோரே கொல்லப்பட்டான் ஆனால் இங்கே இன்னும் 60,000 எலொய் மசோரேக்கள் இருக்கிறார்கள்' என்று மசோரேவின் இறுதி ஊர்வலத்தில் ஒலித்த கனக்கிகளின் குரல் நாளைய சுதந்திரத்தின் கட்டியம் கூறுகிறது. இக்கட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்கா மக்களே! உங்கள் எதிரியை இனங்காணுங்கள்.

இலங்கைத்தீவின் வரலாற்றின் கறைபடிந்த அத்தியாயங்கள் தற்போது ஈழமக்களின் இரத்தத்தில் நனைந்த சிறிலங்கா அரசின் கொலைக்கரங்களால் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நேற்றுவரை ஈழ தேசத்தை மட்டும் ஆக்கிரமித்து நின்ற பாசிச அரசின் அடக்குமுறை இன்று சிறிலங்காவிலும் தனது கோரக்கரங்களைப் பரப்ப ஆரம்பித்து விட்டது. இந்தக் கட்டத்தில் சிறிலங்கா மக்களே நீங்கள் உங்கள் எதிரியை அடையாளம் காணத் தாமதப்படுத்தும் ஒவ்வொரு நிமிடமும் உங்களை படுகுழியிலே தள்ளிக் கொண்டே செல்கிறது.

தனது பதவிக்காலத்தின் ஆயுளை அதிகரிப்பதற்காக சிறிலங்கா அரசு தினந்தோறும் திட்டமிட்டு இனவாதத்தைக் கிளறி வருகிறது. இது தமிழ்-சிங்கள இனங்களுக்கிடையேயான இடைவெளியை அதிகமாக்கிக் கொண்டே போகிறது. சிறிலங்காவின் அமைச்சர்கள் தங்களை துட்டகைமுனுக்களாக கற்பனை செய்து இனவாதத்தைக் கிளறிக் கொண்டிருக்க பௌத்தகுருமார்கள் தங்களை தொடமெய்னிகளாகக் கற்பனை செய்து இனவாதத்தீயை கொழுந்து விட்டெரியச் செய்கிறார்கள். ஆனால் இன்று இந்தப் பிரச்சினைகளின் உண்மையான தாக்கம் உங்கள் தலைகளின் மீதுதான் சுமத்தப்படுகிறது சிறிலங்காவின் சாதாரண மக்களே.

பதவியிலிருக்கும் பாசிச அரசு உங்களை அடியொட்டச் சுரண்டுவதற்காக 'இந்திய ஆக்கிரமிப்பு' என புதிய கதை ஒன்றைக் கட்டிவிட்டிருக்கிறது. அதன் மேல் 'பாதுகாப்பு நிதி' என்றொரு திரட்டு தனக்கெனத் தானே பாதுகாப்புத் தேடிக் கொள்ள முயல்கிறது. ஆகவே சிறிலங்கா மக்களே உங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்களைத் தொட்டுச் சொல்லுங்கள் உங்கள் நாட்டில் இன்றைய அடக்குமுறை ஆட்சியின் கீழ் உங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது. பௌத்த மதத்தைப் பற்றி பக்கம் பக்கமாக பேசும் இந்த பாசிச அரசு தற்செயலாக புத்தர் மீண்டும் இலங்கைக்கு வந்தால் அவரிடமும் அடையாள அட்டையைக் கேட்கும். அதுவும் அவர் இந்தியாவிலிருந்து வந்துள்ளார் என்றால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைக்குள்ளே தள்ளும். இதுதான் அரசின் நிலை.

ஆனால் உங்கள் நிலை என்ன சிங்கள மக்களே. இன்னும் எத்தனை காலங்கட்கு அரசின் அடக்குமுறை அக்கிரமங்களைச் சகித்துக் கொண்டு அடிமைகளாக இருக்கப் போகிறீர்கள். இன்றைய இழிந்த உங்களது நிலையைக் கொஞ்சம் பாருங்கள். உலகத்திலேயே குறைந்த தொகையுடன் ஒப்பிடும்போது மிக அதிகமான கடன் - நிதியுதவி பெறும் நாடு வங்குரோத்தான சிறீலங்கா தான். அதாவது இன்று உலகில் அதிக கடனாளியான மக்கள் நீங்கள் தான். சிறீலங்காவின் பொருளாதாரம் அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. 1983ம் ஆண்டு 98 ஆக இருந்த வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் 1984ம் ஆண்டு 56 ஆக ஆகிவிட்டது. உள்நாட்டுக்கு வருமானம் தந்த உல்லாசப் பிரயாணத்துறையின் கதவுகளை இழுத்து மூடிப் பூட்டுப் போட உங்கள் அரசின் காடைத்தனம் உதவிவிட்டது. வெளிநாட்டு முதலீடுகள் 7.5 மில்லியன் ரூபாயிலிருந்து 3 மில்லியன் ரூபாய்களாகக் குறைந்துவிட்டது. 1984ம் ஆண்டு உலக சந்தையில் ஏற்பட்ட தேயிலை விலை அதிகரிப்புத்தான் இன்று சிறீலங்காவை உயிரோடு உலகில் இருக்கச் செய்கிறது. அந்த தேயிலையை தமது இரத்தத்தைச் சிந்தி விளையச் செய்கின்ற மலையகத் தமிழ் மக்களையும் இதற்குப் பிரதிபலனாக அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளையும் சற்று சிந்தித்துப் பாருங்களேன் சிங்கள மக்களே அப்போது உங்கள் எதிரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது உங்களுக்குப் புரியும். ஈழ மக்களைப் பழி வாங்கும் நோக்குடன் சிறீலங்கா அரசு மீன்பிடித்தொழிலை ஈழதேசத்தில் நாசம் செய்தது. விளைவு நாட்டிற்கு தேவையான 85% மான மீன்களைத் தந்த 20,000 க்கும் மேற்பட்ட ஈழ மக்களின் வாழ்க்கை கண்ணீரில் விடப்பட்டது. அதனால் உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு சாதாரணமானதா? சிறீலங்கா மக்களுக்கு தேவையான புரதச் சத்தின 60% இனை தருகின்ற எங்கள் மீன்கள் தடுக்கப்பட்டதால் நாளை நீங்கள் ஒரு நோய்கொண்ட வலுவற்ற சமுதாயமாகப் போகிறீர்கள்.

அடிமைத்தனங்களால் பிணைக்கப்பட்ட இன்றைய உங்களது அவல நிலையைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். உங்கள் பிள்ளைகள் பல்கலைக் கழகங்களில் அரசபடையினரால் அடித்து நொறுக்கப்படுகிறார்கள். அவர்களது அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இவற்றுக்கு எதிராக அவர்கள் போர்க்கொடி உயர்த்தினால் அவர்கள் எங்கள் போராளிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு மீளமுடியாத வதை முகாம்களுக்குத் தள்ளப்படுகின்றனர். உங்கள் தொழிற்சங்கங்களுக்கு போராடும் உரிமை இல்லை. உங்கள் பத்திரிகைகளுக்கு உண்மைச் செய்திகளை வெளியிடும் உரிமை இல்லை. உங்களது வாக்குரிமை மெல்ல மெல்லப் பறிக்கப்படுகிறது. பேச்சுரிமைக்குப் பூட்டுப் போடப்படுகிறது. உங்கள் நாடு மெல்ல மெல்ல ஏகாதிபத்தியங்கட்கு விற்கப்படுகிறது. உங்கள் உழைப்புச் சுரண்டப்படுகிறது.

நாட்டுக்குள்ளே ஒரு நாடு சுதந்திர வர்த்தக வலயத்தில் உருவாக்கப்பட்டு தொழிலாளர்கட்கு உரிய அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு உங்கள் பெண்களின் இரத்தம் அங்கே அரசபாதுகாப்புடன் பணமுதலைகளால் உறிஞ்சப்படுகிறது. இன்று எங்கள் தேசத்தில் சிறீலங்கா அரசு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கையாக ஏற்படுத்திய பஞ்சம் நாளை உங்கள் பூமியில் இயற்கையாகவே வரும் சூழ்நிலை நெருங்குகிறது.

உங்கள் ஜனாதிபதி கூறுகிறார் 'தமிழ் மக்களின் போராட்டத்தை முறியடிக்க அரசின் முழுச் செல்வத்தையும் பயன்படுத்துவேன்' என்று. சிறீலங்கா மக்களே உங்கள் வரிப்பணம் துப்பாக்கிகளாயும், டாங்கிகளாயும், நவீனரக ஆயுதங்களாயும் எங்கள் பூமியில் இரத்தத்தை சிந்தச் செய்கின்றன. அதற்கு இந்த வரிகளை கொடுக்க நீங்களும் கூடத்தான் இரத்தம் சிந்துகிறீர்கள். ஆனால் நிச்சயமாக எமக்குத் தெரியும் இந்தத் துப்பாக்கிகள் நாளை உங்களை நோக்கித் திரும்புமென்று.

சிறீலங்கா மக்களே! நாங்கள் உங்கள் எதிரிகள் அல்ல. எங்களது அடிப்படை உரிமைகளுக்காக போராடும் உங்கள் சகோதரர்கள். நாங்கள் சமாதானத்துக்காக உங்கள் அரசிடம் வெள்ளைக் கொடியை ஏந்தி வந்தோம். ஆனால் அரசு துப்பாக்கியை ஏந்தி எங்கள் சமாதானக் கொடியை எங்கள் இரத்தத்தால் சிவப்பாக்கியது. அதனால் அதனது மொழியிலேயே இப்போது பேச ஆரம்பித்திருக்கிறோம். நீங்களும் உங்கள் எதிரியை - சிறீலங்கா அரசை இனங்கண்டு கொள்ளுங்கள். எதிரியைத் தாக்கும் போராட்டத்தை தொடங்குங்கள். நாங்களும் துணைவருவோம் சுதந்திர ஈழத்தின் பிரஜைகளாக ....

---

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் தரும் ஈழச் செய்திகளை தொலைபேசி மூலம் அறிவதற்கான தொடர்பு எண் 874-60-43.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடனான (பிரான்சுக் கிளை) தொடர்புகட்கு...

10, RUE DES MARTYRS
75009 - PARIS.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [redacted]யத்தை தகர்த்தெறிய [redacted]ம் ஒன்றிணைவோம்.

இலட்சக்கணக்கான உலகமக்களின் இரத்தங்களில் தனது கரங்களை நனைத்துக்கொண்டதும் சர்வதேச பயங்கரவாதத்தின் உற்பத்திப்பீடமுமான அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று உலகரீதியாக தனக்கு ஏற்பட்டுவரும் தோல்விகளிலிருந்து மீளவும், தன்னுடைய காலனித்துவ சாம்ராச்சியத்திற்கு புத்துயிர் கொடுக்கவும் முன்னெப்போதையும்விட வேகமாக வெறித்தனமாகத் தன்னுடைய சதியாளர்கள் சங்கமாகிய சி.ஐ.ஏ யினூடாக பூமிப்பந்தின் திக்குத்திசையெல்லாம் கேவலமான சதிகளைக் கட்டவிழ்த்து விட ஆரம்பித்துவிட்டது.

இன்று உலகின் ஒவ்வொருமூலையிலும் உள்ள மக்களிடையே தோன்றியுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு சார்பான விருப்புக் கொள்கைகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக பூகோளமேற்பரப்பில் பல எதிர்ப்புக் கொடிகள் உயர்த்துவதற்கு காரணமாயுள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மிரட்டல்களையும் மீறி நியூசிலாந்து அமெரிக்க நியூக்கிளியர் கப்பல்கள் தனது துறைமுகங்கட்கு வரக்கூடாது என்று தடைவிதித்துவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எச்சரிக்கைகளைத் தூக்கியெறிந்து கிரேக்கம் அமெரிக்க ஏவுகணைகளை தனது மண்ணில் புதைக்க அனுமதி மறுத்துவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அந்நியோன்ய நண்பனான அவுஸ்திரேலிய அரசுகூட மக்களின் உந்துதல்களினால் அமெரிக்க அணுகுண்டுப் பரிசோதனைகளை தனது பிராந்தியத்தில் வைக்கக்கூடாது என்று உத்தரவிட்டுவிட்டது. இத்தகைய அடிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு கொடுக்கும் வலி ஒருபுறம் என்றால் →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறம் இந்த ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மை ஆட்சியாளர்கள் பலரும், எதிராக கிளர்ந்தெழுந்திருக்கும் மக்கள் போராட்டங்களினால் தமது ஆட்சியின் அந்திமகாலத்தை அண்மித்திருப்பது ஏகாதிபத்தியத்திற்கு மேலும் வலியைக்கொடுத்திருக்கிறது

லெபனானின் தேசியத்தன்மையை நிலைநிறுத்தப் போராடும் விடுதலை இயக்கங்களிடம் அமெரிக்க ஏகாதிபத்தியம் தோற்று தோல்விகண்டு புறமுதுகு காட்டியது பழைய கதை. இன்று அதன் செல்லப்பிள்ளையாகிய இஸ்ரேலும் விடுதலைப்படைகளால் வெளியேவிட்டு அடித்துவிரட்டப்பட்டது. பிலிப்பைன்ஸிலும், தென்கொரியாவிலும், பாகிஸ்தானிலும், பங்களாதேஷிலும் அமெரிக்க ஏகாதிபத்திய கைப்பொம்மையாளருக்கு எதிராக தோன்றியிருக்கும் மக்களின் பெரும் எதிர்ப்பு, இந்தியாவில் இந்தியமக்களின் ஒருமைப்பாட்டைக் கெடுத்தல் மூலம் உறுதிப்படுத்தப்படும் அதைத்தொடர்ந்து சி.ஐ.ஏ.யின் சதிகள் அம்பலப்படுத்தப்பட்ட நிகழ்வுகள், கம்போடியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியக் கைக்கூலிப்படைகளுக்கு வியட்நாம்-கம்போடிய புரட்சிப்படைகள் கொடுத்த பேரடி அனைத்தும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு 'உனது அந்திமகாலம் நெருங்கிவிட்டது' என மீண்டும் மீண்டும் கூறி எச்சரிக்கின்றன.

இந்த நிலையில் தனது ஆதிக்கக்கொடியை மீண்டும் பறக்கவிடவும், சுரண்டல் சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் சி.ஐ.ஏ.யினூடாக சதிவேலைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இச்சதிகள் பல அமெரிக்க மக்களுக்கே மறைக்கப்பட்டுள்ளன. அமெரிக்க சட்டத்துக்கு விரோதமாக மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச பயங்கரவாதத்தின் தலைவனும், அமெரிக்க ஜனாதிபதியுமான ரேகன், உபஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், சி.ஐ.ஏ.யின் தலைவன் வில்லியம் கேசி ஆகியோரின் நேரடி மேற்பார்வையிலே இச்சதிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இருக்காலண்டுக் காலப்பகுதியில் ஆப்கானிஸ்தானின் முற்போக்கு அரசைக் கவிழ்த்து தனது கைப்பொம்மைகளைப் பதவியில் கொண்டுவருவதற்காக ஆப்கானிஸ்தானின் எதிர்ப்புரட்சியாளர்களுக்கு சி.ஐ.ஏ 300 தொடக்கம் 500 மில்லியன் டொலர்கள் வரையிலான நிதியையும் ஆயுதங்களையும் வழங்கியுள்ளது. 1985ம் ஆண்டு மாத்திரம் 250 மில்லியன் டொலர்களை இந்தப் புரட்சியாளர்களுக்கு வழங்க சி.ஐ.ஏ தீர்மானித்துள்ளது. இது மாத்திரமல்ல இந்தியாவின் பாதுகாப்புக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில் பாகிஸ்தானுக்கு நவீனரக ஆயுதங்களை வழங்கி வருவதுமல்லாமல் சர்வாதிகாரி ஸியா-வுல்-ஹக் தொடர்ந்து பதவியிலிருக்க சி.ஐ.ஏ பக்கதுணையாகவும் உள்ளது.

நிக்கரகுவாவின் சான்டினிஸ்டியப் புரட்சி அரசை கவிழ்ப்பதற்கான சதிவேலைகள் 1981 டிசம்பரில் கொலை றெய்யன் றேகனால் வடிவமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் சர்வாதிகாரி சமோசவின் கூலிப்படைகள் 500 பேருக்கு ஆயுதங்களும், நிதியும் அளிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட கூலிப்படை, இன்று றேகனால் தனது 'அன்புச் சகோதரர்கள்' என்று அழைக்கப்படும் 15,000 தொடக்கம் 18,000 எதிர்ப்புரட்சியாளர்களைக் கொண்ட சதிக்கும்பலாக சி.ஐ.ஏ யால் வளர்க்கப்பட்டுள்ளது. சி.ஐ.ஏ யினர் நேரடியாக நிக்கரகுவாவின் துறைமுகங்களில் கண்ணிவெடிகளை புதைத்தனர். 1984ம் ஆண்டு அமெரிக்க காங்கிரஸ் தற்காலிகமான நிக்கரகுவா விரோத சதிவேலைகளுக்கான சி.ஐ.ஏ யின் நிதி ஒதுக்கீட்டைத் தடுத்தபோதும், தனியார் மூலமாக சி.ஐ.ஏ சதிவேலைகளை முடுக்கிவிட்டது. அமெரிக்கப் பிரஜைகளையும் படைகளையும் நேரடியாக இன்று இச்சதிகளில் நிக்கரகுவாவிற்கு எதிராக சி.ஐ.ஏ ஈடுபடுத்தியுள்ளது →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்சல்வடோரில் கடந்த ஐந்தாண்டுகளில் பலிக்கப்பட்ட 50,000 க்கும் மேற்பட்ட அப்பாவிமக்களின் உயிர்களுக்கு சி.ஐ.ஏ யே பொறுப்பேற்க வேண்டும். படுகொலைகளுக்கும், மிருகத்தனமான சித்திரவதைகளுக்கும் பொறுப்பான சல்வடோரின் பொலிஸ் மற்றும் உளவுபடைகள் சி.ஐ.ஏயின் வழிநடத்தலைப்பெறுகின்றன. கொலைவெறிபிடித்த சல்வடோரின் இராணுவம் சி.ஐ.ஏயினால் பயிற்றுவிக்கப்பட்டது. பதவியிலிருக்கும் டியூரேட்டின் அரசு அமெரிக்கத் துப்பாக்கிமுனைகளில் நடத்தப்பட்ட சல்வடோரின் தேர்தல்களில் வெற்றிபெற சி.ஐ.ஏ மில்லியன் கணக்கான டொலர்களைச் செலவழித்தது. அனைத்தும்விட கம்யூனிஸ எதிர்ப்பு வெறிபிடித்த அங்கும் தீவிரவாத வலதுசாரிக் கொலைக்குழுவிற்கான நிதியும் சி.ஐ.ஏயினால் அளிக்கப்படுகிறது. ஆகமொத்தம் எல்சல்வடோரின் அப்பாவிமக்களைக் கொன்றுகுவிக்கும் சகல கொலைக்குழுக்களும் இயக்கப்படும் மையஸ்தாபனமாக சி.ஐ.ஏ யே இருக்கின்றது.

1981ம் ஆண்டு தீட்டிய திட்டப்படி, சாட்டின் சோஷலிச நாடுகளுக்குச் சார்பான ஏகாதிபத்திய விரோதத்தன்மைவாய்ந்த குகொன்னி ஒட்டியின் அரசுக்கு எதிரான ஏகாதிபத்தியக் கைக்கூலியான ஹிஸ்ஸேன் ஹப்ரேயின் எதிர்ப்புரட்சிக்கும்பலுக்கு ஆயுதம் வழங்கி 1982ம் ஆண்டு யூனில் குகொன்னி ஒட்டியின் அரசைக் கவிழ்த்த சி.ஐ.ஏ இன்று மக்களின் எதிர்ப்பைச் சமாளித்து தனது கைப்பொம்மை ஹப்ரேயை பதவியில் வைத்திருக்க 20 மில்லியன் டொலர்களுக்கு மேலான பெறுமதிவாய்ந்த 'ஆயுதங்களை' அளித்துள்ளது. அதே ஆண்டில் ஆபிரிக்க-அரபுப் பிராந்தியத்தில் தொடர்ந்து ஏகாதிபத்தியம் எதிர்ப்புக்கொடியை உயர்த்திப்பிடித்திருக்கும் லிபியத் தலைவர் கேர்ணல் கடாபியின் உயிரைப் பறித்து ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான தொடர்ந்த சதிகளில் சி.ஐ.ஏ தொடர்ந்தும் ஈடுபட்டுவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரானின் இஸ்லாமியப் புரட்சியரசைக் கவிழ்ப்பதற்கான சதிகளில் ஈடுபட்ட எதிர்ப்புரட்சிப்படைகளுக்கு நிதியுதவி அளித்துவரும் சி.ஐ.ஏ இன்று ஈரான் - ஈராக் போரில் இன்று ஈராக்குடன் இணைந்து ஈரானை முறியடிப்பதற்கான தொடர்ந்த சதிகளைச் செய்துவருகிறது. ஆபிரிக்காவில் இரத்தவெறிபிடித்த சி.ஐ.ஏ யினர் செய்துவரும் அட்டூழியங்கள் ஏராளமானவை. அங்கோலாவில் புரட்சிகர அரசுக்கு எதிராக நிறவெறிபிடித்த தென்னாபிரிக்க அரசின் உதவியுடன் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் துரோகி ஜோனாஸ் சாவிம்பியின் கூலிப்படைகளுக்கு கப்பல்களில் ஆயுதம், மொசாம்பிக் அரசைக் கவிழ்ப்பதற்கான முயற்சிக்கும் சதிக்கும்பலுக்குத் தேவையான அனைத்து உதவிகள், தனது இனமக்களுக்காகப் போராடும் ஆபிரிக்க காங்கிரசின் போராட்டத்தை முறியடிக்க நிறவெறி பிடித்த தென்னாபிரிக்க அரசுக்கு சி.ஐ.ஏ யின் ஆயுத, நிதி, ஆலோசனை உதவிகள், அனைத்துமே ஆபிரிக்காவில் சி.ஐ.ஏ பின்னிவரும் சதிவலையின் சில நூல்கள்.


புரட்சிகர அரசாங்கங்களைக் கவிழ்க்கவும் அவற்றின் தலைவர்களைக் கொல்லவும், தேசவிடுதலை இயக்கங்களினதும், உலகத் தொழிலாளர்களினதும் போராட்டங்களை நசுக்கவும், தொடர்ந்து உலகத்தை தனது காலடியின் கீழ் வைத்து மிதித்து, உலகமக்களின் குரல்வளைகளை தனது கொலைக்கரங்களால் நசிக்கவும் முயன்றுவரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், அதன் கொலைக்கும்பலான சி.ஐ.ஏ இனதும் சதிகளை அம்பலப்படுத்துவதிலும், முறியடிப்பதிலும் ஒடுக்கப்பட்ட அனைத்து தேசமக்களுடனும் ஈழமக்களாகிய நாம் ஒன்றிணைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரான்சு

## பிரான்சு ஒரு கண்ணோட்டம்......




1986ம் ஆண்டிலே பாராளுமன்றத் தேர்தல்கள் நெருங்க ஆரம்பித்துள்ள இவ்வேளையிலே பிரான்சின் தேசிய அரசியல் நிலை பற்றிய ஆய்வாளர்கள் சிக்கலான ஒரு நிலையை அடைந்துள்ளனர். ஆளும் சோசலிசக் கட்சி மக்களின் ஆதரவை இழந்த நிலையும் வலதுசாரி எதிர்க் கட்சிகள் மக்களின் ஆதரவைப் பெற்றிருக்காத நிலையும் 1986ம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் பற்றிய கணிப்பீடுகளை மேற்கொள்வதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளன. கடந்த வருடத்திய அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரானுக்கு மக்களின் சாதக வாக்கு சராசரியாக 30% என்று கூறியுள்ளன. இது பிரான்சின் வரலாற்றிலே எந்த ஜனாதிபதிக்கும் கிடைக்காத மிகக் குறைந்த வாக்கு வீதமாகும். ஆனால் இவ்வருடத்தின் ஆரம்பக் கணிப்பீடுகள் ஜனாதிபதியின் ஆதரவு சற்று அதிகரிப்பதைக் காட்டுகிறது.

அதேவேளையில் சோசலிச அரசின்மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்திக்குப் பதிலாக சரியான அரசியல், பொருளாதாரத் திட்டங்கள் எதையும் முன்வைக்க முடியாததாலும், சோசலிச அரசுக்கெதிராக உறுதியான எதிர்க்கட்சியொன்று இரு நிலையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் உடன்பாட்டை முடியாமல் மூன்றாகப் பிரிந்து நிற்கும் பிரதான எதிர்க்கட்சிகளாலும் மக்களின் ஆதரவை சம்பாதிக்க முடியவில்லை. இதில் வலதுசாரியாகக் கூறப்பட்ட கட்சியான RPR இன் தலைவரும் பாரிஸ் மேயருமான ஜக் சிராக் 1988ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு பதவியைக் கைப்பற்றுவதற்காக இனவாதம் பேசுகின்ற தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணியுடன் சேர முற்பட்டது சிராக்கை தோற்கடித்துக் காட்டியதுடன் சிராக்கிற்கு இருந்த மக்களின் ஆதரவையும் குறைய வைத்துள்ளது. அதே வேளையில் கடந்த தேர்தலின் போது சோசலிசக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு தற்போது விவாகரத்து எடுத்துவிட்ட பிரான்சுக் கம்யூனிஸ்ட் கட்சி உட்கட்சிப் போராட்டங்களால் தடுமாற்றமடைந்துள்ளதை கடந்த மாதம் நடந்த கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் காட்டியுள்ளது. தொடர்ச்சியாக இக்கட்சி மக்களின் ஆதரவையும் இழக்க ஆரம்பித்துள்ளது.

இக்கட்டத்தில் தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடிகளின் பின் பிரெஞ்சுப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் இத்தேர்தலில் பெரும் பங்கை வகிக்கப் போகிறது. சோசலிச அரசு பதவிக்கு வந்தபோது 14% ஆக அமைந்த பணவீக்கம் தற்போது 6.7% மாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது இவ்வருட முடிவில் 4.5 - 5% மாகக் குறைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரான்சின் பொருளாதாரத்தில் பெரிய பாதிப்பாக இருந்த வர்த்தகக் கடன் பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு இது 20 பில்லியன் பிரெஞ்சு பிராங்குகளாகும். இது 1982ம் ஆண்டு வர்த்தகக் கடனின் $\frac{1}{4}$ பங்காக கடந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு வேலைநிறுத்தங்கள் போன்ற தொழிலாளர் பிரச்சனைகளும் கணிசமான அளவில் குறைக்கப்பட்டுள்ளன. அதே வேளையில் சோசலிச அரசாங்கப் பாதிப்பான வகையில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 11% மாக 2.4 மில்லியனை அதிகரித்துள்ளது. இப்பிரச்சினையைத் தீர்க்க சோசலிச அரசினால் சரியான நடவடிக்கைகளை எடுக்க முடியுமானால் அடுத்த தேர்தலில் சோசலிசக் கட்சி மீண்டும் பதவிக்கு வரமுடியும். இல்லையேல் இதே அரசியல் குழப்பமான சூழ்நிலை பிரான்சில் உருவாவது தடுக்கப்படமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா

## நிக்கரகுவாவிற்கு எதிரான சர்வதேசப் பயங்கரவாதி ரேகனின் பகிரங்க சதி.

நிக்கரகுவாவின் புரட்சிகர அரசைக் கவிழ்ப்பதற்காக தொடர்ச்சியாக அமெரிக்க ஏகாதிபத்தியம் இரகசியச் சதிவேலைகளில் ஈடுபட்டு வந்ததை அனைவரும் அறிவர். தற்போது சர்வதேசப் பயங்கரவாதத்தின் தலைவனான அமெரிக்க ஜனாதிபதி ரேகன் தான் இரண்டாவது தடவை பதவிக்கு வந்தபின் நடாத்திய முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிக்கரகுவாவின் புரட்சிகர அரசை கவிழ்க்கப்போவதாக பகிரங்கமாகவே அறைகூவல் விடுத்துள்ளான். அவனோடு கூட அவனது ராஜாங்க அமைச்சரான ஜோர்ஜ் சுல்ட்சும் நிக்கரகுவாவை 'கம்யூனிச இருட்டிலிருந்து' விடுவிக்கப் போவதாகப் பிதற்றியுள்ளான். இந்தப் போர் வெறியர்களது பகிரங்கப் பேச்சு இவர்களது முகமூடிகளைக் கிழித்து உண்மைச் சொரூபங்களை உலகிற்குக் காட்டியுள்ளது. அதேவேளையில் மக்களால், மக்களுக்காக, மக்களே அரசாளும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட புரட்சிகர அரசாங்கங்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் பகிரங்கமாகவே கவிழ்க்க முற்பட்டிருப்பது சின்னஞ்சிறு நாடான நிக்கரகுவாவிற்கு மட்டுமல்ல மனித உரிமைகளையும், மனிதநேயத்தையும் விரும்புகின்ற அனைத்துலக மக்களுக்கும் விடுக்கப்பட்ட பெரும் அச்சுறுத்தலாகவே கருதப்படுகிறது.


கம்போடியா.

## வியட்நாம் - கம்போடிய புரட்சிப்படைகளுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி!

கம்போடியாவில் பதவியிலிருக்கும் கம்யூனிச அரசைக் கவிழ்ப்பதற்கும் இந்தோசீனாவில் ஏகாதிபத்தியச் சுரண்டலை விஸ்தரிப்பதற்காகவும் எதிர்ப்புரட்சித் தாக்குதல்களை நிகழ்த்தி கம்போடியாவின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவரும் அமெரிக்க - சீனக் கைக்கூலிகளான எதிர்ப்புரட்சிக் கூலிப்படைகள் மீது வியட்நாம் - கம்போடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிப்படைகள் சோவியத் டாங்கிகள் சகிதம் மேற்கொண்ட தாக்குதல்கள் தொடர்ந்து பெரு வெற்றியை அளித்துள்ளன. கடந்தமாதம் புரட்சிப்




படைகள் மேற்கொண்ட தாக்குதலில் KPNLF கெரில்லாப்படைகளின் தளங்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டு கெரில்லாப்படைகள் விரட்டியடிக்கப்பட்டனர். இம்முறைத் தாக்குதல் நீண்டகாலக் கெரில்லா இலக்குகளான கம்போடிய மக்களின் கொலைநாயகனான போல்பொட்டின் தலைமையில் இயங்கும் KHMER ROUGE கெரில்லாப்படைகளின் தலைமுகாம்களும் தகர்த்தெறியப்பட்டு கெரில்லாப்படைகள் கம்போடிய எல்லையைவிட்டு விரட்டியடிக்கப்பட்டனர். ஏறத்தாழ 40,000 பேரைக் கொண்டதும், உலகின் அதிதீவிர கொரில்லாக்கள் என்ற பெயரைக் கொண்டதும் அமெரிக்க-சீன ஆயுதங்களைத் தாங்கியதுமான KHMER ROUGE கெரில்லாப்படையினர் தோற்கடிக்கப்பட்டமை இந்தோசீனாவின் புரட்சி வரலாற்றில் ஒரு புது அத்தியாயத்தை எழுதியுள்ளது.

ஜெனீவா

## ஐ.நா. ஆணைக்குழு இஸ்ரேல் மீது கண்டனம்!

ஜெனீவாவில் கூடிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு இரண்டு பிரேரணைகள் மூலம் இஸ்ரேலைக் கண்டித்துள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் மனித உரிமைகளை மீறுவதற்காக இஸ்ரேலைக் கண்டித்திருக்கும் ஆணைக்குழு, இஸ்ரேல் மீது தடைகள் விதிக்கப்பட வேண்டுமென பாதுகாப்புச் சபையைக் கோரியுள்ளது. 43 நாடுகள் அங்கம் வகிக்கும் மேற்படி ஆணைக்குழுவில் இரண்டு தீர்மானங்களையும் எதிர்த்த ஒரேயொரு நாடு வழமைபோல அமெரிக்காதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா

### சட்டசபைத் தேர்தல் வேட்பாளர் நியமனங்களில் ராஜீவ் கடும் கட்டுப்பாடு.

இம்மாதம் 2ம் 3ம் திகதிகளில் இந்தியாவின் பதினொரு சட்டசபைகளுக்கு நடைபெறும் தேர்தல்களில் சுமார் ஆயிரம் உறுப்பினர்களுக்கு இந்திரா காங்கிரஸ் நியமனம் வழங்கவில்லை. இதில் 70 பேர் அமைச்சர்களாவார். இது ராஜீவ் காந்தியின் பணிப்பின் பேரிலேயே தீர்மானிக்கப்பட்டது. கட்சியைத் தூய்மைப்படுத்தும் முயற்சியாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதேவேளையில் இந்திய பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கட்சித்தாவலை தடைசெய்யும் மசோதா ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்தச் செயற்பாடுகள் ராஜீவ் காந்தி மீது மக்கள் கொண்ட நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

## தென் ஆபிரிக்கா.

### தென் ஆபிரிக்க அரசின் நிபந்தனையை நெல்சன் மண்டலே நிராகரித்தார்.



NELSON MANDELA

நிறவெறிபிடித்த தென்னாபிரிக்க அரசால் சிறைசெய்யப்பட்டு 1964ம் ஆண்டுமுதல் ஆயுள்தண்டனையை அனுபவித்துவரும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் முன்னாள் தலைவரான 66 வயதுடைய நெல்சன் மண்டலே, வன்முறையைக் கைவிட்டால் விடுதலை செய்வதாக நிறவெறி அரசாங்கம் விடுத்த கோரிக்கையை நிராகரித்துள்ளார். சிறுபான்மை வெள்ளையர் ஆட்சியின் இனவெறிக்கொடுமைக்கெதிரான போராட்டத்தின் சர்வதேசச் சின்னமாக விளங்கும் மண்டலே விடுத்த செய்தியை அவரது மகள் ஸின்சி மக்களுக்கு அறிவித்தார். 'மக்களாகிய நீங்களும் நானும் சுதந்திரமாக வாழ முடியாத இவ்வேளையில் எந்தவித உறுதிமொழியையும் யாருக்காகவும் வழங்கமாட்டேன். வழங்கமுடியாது. உங்கள் சுதந்திரமும் எனது விடுதலையும் பிரிக்கப்பட முடியாதவை' என மண்டலே தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமாதானத்தின் தோழன் சோவியத்யூனியன்


போர்வெறிபிடித்தவனும், சர்வதேச அடக்குமுறையின் இன்றைய தளபதியும், புதிய ஹிட்லருமான றேகன் இரண்டாவது தடவையாக மீண்டும் ஜனாதிபதிப் பதவியை ஏற்றதும் இரத்த வெறிபிடித்த அவனது பாதுகாப்பமைச்சர் வெயின் பேகருடன் சேர்ந்து உலகம் முழுவதும் போர் அபாயத்தைப் பரப்ப ஆரம்பித்துவிட்டான். இக்கட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர் அச்சுறுத்தலுக்கு எதிராகவும், ஒடுக்கப்படும் மக்களுக்கு உற்ற துணையாகவும், சர்வதேச சமாதானத்தின் தோழனாகவும் இருந்துவரும் சோவியத் யூனியனுக்கெதிராக - சோவியத் யூனியனை உலக சமாதானத்தின் எதிரி எனக் காட்டும் வகையில் - பொய்ப் பிரச்சாரங்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகளாவ பாரிய அளவில் முடுக்கிவிட்டுள்ளது. இந்த நிலையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சுயரூபத்தை அம்பலப்படுத்தி, சோவியத் யூனியனின் சமாதான விருப்பக் கொள்கைகளைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகிறது.

உலகவரலாற்றின் கடந்தகாலப் பக்கங்கள் மாத்திரமல்ல நிகழ்கால சம்பவங்களும் கூட நமக்கு உண்மை நிலையைத் தெளிவாக்கின்றன. உண்மையில் இன்று அமெரிக்க ஜனாதிபதி றேகன் அணு ஆயுத உற்பத்திப் போட்டியில் இறங்கியுள்ளான். உலகின் பல்வேறு பகுதிகளில் இராணுவ மோதல்களைத் தூண்டிவிடுகிறான். தன்னுடைய உலக நடுவிய பிற்போக்குச் சதித் திட்டங்களில் சேரும்படி சுதந்திர நாடுகளை வற்புறுத்துகிறான். அணு ஆயுதப் போட்டிக்கு முடிவு காணவும் மனித குலத்தின் எதிர்காலத்திற்கே அபாயம் விளைவிக்கக்கூடிய அணு ஆயுதப் பேரழிவிலிருந்து உலகைக் காப்பாற்றவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் தலைமை முன்வைத்திருக்கும் பல்வேறு நியாயமான ஆலோசனைகளுக்கு பதிலளிக்க றேகன் மறுக்கிறான். சோவியத் அதிபர் தோழர் பிரஷ்னேவ் 'அணு ஆயுதங்களை முதலில் உபயோகிப்பதில்லை' என உறுதி எடுக்க வேண்டுமென்று ஐ.நா. சபையில அறிவித்தபோது அந்த ஆலோசனையைக்கூட றேகன் நிராகரித்துவிட்டான்.

அதேசமயம், சோவியத் யூனியன் மீதும், ஏனைய சோசலிச நாடுகளின் மீதும் திடீரென அணுஆயுதத் தாக்குதல் தொடுப்பதற்கு அமெரிக்க இராணுவத் தலைமையான 'பென்டகோன்' பாரிய தயாரிப்புகளைச் செய்து கொண்டிருக்கின்றது. கடந்த வருடம் தேர்தலின் போது றேகன் அமெரிக்க மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைப் பொய்யாக்கி மக்களின் சுகாதாரச் செலவீடுகள் உட்பட 26 வேறுபட்ட உள்நாட்டு அபிவிருத்தித் திட்டங்களை இரத்துச் செய்து, வரிச்சுமைகளை மக்களின் தலைகளில் சுமத்தி பென்டகோனுக்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதைவிட 13% அதிகமான நிதியை ஒதுக்கியுள்ளான். 1986ம் ஆண்டுக்கான பென்டகோனின் நிதி ஒதுக்கீடு 285.7 பில்லியன் டொலர்களாகும். இதே வேளையில் சோவியத் யூனியனின் இராணுவச் செலவுகள் 1976ம் ஆண்டிலிருந்து வருடா வருடம் 2% ஆல் குறைக்கப்பட்டு வருகின்றது. இச்செயல்களே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர்வெறியையும் சோவியத் யூனியனின் சமாதான விருப்பையும் தெளிவாக்குகிறது.




உலகை அழிவிற்குக் கொண்டுசெல்ல அமெரிக்க ஏகாதிபத்தியம் குவித்து வைத்திருக்கும் ஆயுதங்கள் 1980 – 84 இடைப்பட்ட அதிகரிப்பு

இன்று மூன்றாவது உலக நாடுகள் தாளமுடியாத பொருளாதார நெருக்கடியில் தவித்துக்கொண்டிருக்கின்றன. ஆபிரிக்க நாடுகள் பஞ்சத்தில் பரிதவித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் போர்வெறி பிடித்த பென்டகோனோ கோடிக்கணக்கான டொலர்களைச் செலவு செய்து நவீன ரக ஆயுதங்களை செய்து குவிக்கிறது. அவற்றை வாங்கும்படி பல நாடுகளை வற்புறுத்துகிறது. அல்லது வாங்கவேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுப்புறச் சூழ்நிலைகளை உருவாக்கி அந்நாடுகளை நிர்ப்பந்திக்கிறது. நவீன ரக ஆயுதங்களின் உருவாக்கம் உலக சமாதானத்துக்குப் பங்கம் விளைவிக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் அள்ளியிறைக்கும் பணத்தின் சில துளிகள் இதோ . . . .

ஒரு M1 ABRAMS TANK இனை உருவாக்குவதற்கு பென்டகன் செலவழிக்கும் தொகை 2.8 மில்லியன் டொலர்கள். F-15 FIGHTER போர் விமானங்களில் ஒன்றைச் செய்வதற்கு 27.7 மில்லியன் டொலர்கள் செலவழிக்கப்படுகிறது. இதுபோல F-18 FIGHTER BOMBER போர் விமானங்களில் ஒன்றைச் செய்வதற்கு 29 மில்லியன் டொலர்கள் செலவழிக்கப்படுகின்றன. இந்த ஆயுதக்குவிப்புப் பற்றி கருத்துக் கேட்ட போது இரத்தவெறிபிடித்த அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சரான வெயின் பேகர் கூறியது இது தான் "... நாங்கள் இந்த நவீன ரக ஆயுதங்களை உற்பத்தி செய்வது நூதனசாலைகளில் வைப்பதற்கு அல்ல. உபயோகப்படுத்துவதற்கே ...." உபயோகப்படுத்துவது என்றால் யாருக்கு எதிராக என்பதை விளக்கத் தேவையில்லை.

ஆனால் அதே வேளையில் ஆயுத உற்பத்தியினை குறைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி சோவியத் ஜனாதிபதி தோழர் செர்னென்கோ கூறிய கருத்து.... "ஆயுத உற்பத்தியின் பெருமளவு பணத்தை ஈடுபடுத்த சோவியத் யூனியன் விரும்பவில்லை. எந்தப் போரினையும் தவிர்க்கவே சோவியத் யூனியன் விரும்புகிறது. ஆயுதப்பரிகரணம் கட்டுப்பாடு தொடர்பான எந்தப் பேச்சு வார்த்தைகளுக்கும் சோவியத் யூனியன் தயாராக இருக்கிறது". இது சோவியத் யூனியனின் சமாதான விருப்பக் கொள்கைக்கு பெரும் ஒரு நிரூபணம் ஆகும்.

உண்மையிலே இராணுவ மேம்பாட்டு நிலையைச் செய்வது என்னும் பாதையை சோவியத் யூனியன் அடிப்படையாகவே நிராகரிக்கிறது. அது இராணுவ மேம்பாட்டை அடைவதற்காக முயற்சி செய்யவில்லை. வேறுயாருக்கும் அத்தகைய உரிமை இருப்பதாக அது அங்கீகரிப்பதுமில்லை. சோவியத் யூனியன் எந்தச் சூழ்நிலையிலும் தனது பாதுகாப்பையும் தனது நேச நாடுகள் மற்றும் நட்பு நாடுகளது பாதுகாப்பையும் பேணிக் காக்கும். எனவே சோவியத் யூனியனின் இச்செயல்களை அறிந்து சோவியத் யூனியனை போர் விரும்பியாகக் காட்டமுயலும் ஏகாதிபத்தியப் பிரச்சாரச் சக்திகளை முறியடிப்போம். ஒடுக்கப்பட்ட மக்களின் உற்ற துணைவனை சோவியத் யூனியனுடன் இணைந்து போரிடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனின் வேண்டுகோள்

அம்மா
உன் கண்கள் ஏன் கலங்குகின்றன
காணமல் போன உன் மகனை
எண்ணியா?

உனக்குத் தெரியும்
அவன் ஒரு புரட்சி விடுதலை இயக்கத்தில்
சேர்ந்திருப்பான் என்று
அதுதான் பதறுகிறாய்

அம்மா
அவன் உன் கண் முன்னால் வாழ்ந்த போது
நாட்டில் நடந்தது என்ன
தென்றலை மறந்த வசந்தமும்.
மழையை மறந்த மார்கழியும்
நாம் சந்தித்த காலங்கள்
கடைக்குப் போன மகன்
நலமுடன் வீடு வந்தால்
அவனது ஆயுள் பலமானது
என்ற நிலைமை
எனக்குத் தெரியும்
நீ அழுவதை நிறுத்தவில்லை

அம்மா
உன் கண்களுக்கு மறைந்தாலும்
வாழப் போகிறேன்
நம் இனத்தின் விடுதலைக்காக
அவன் பணி தொடரப் போகின்றது
அவன் வழியில்
பாட்டாளி வர்க்க புரட்சிக் கொடி
ஏந்தப் போகின்றது
இன்னுமா?
உன் மனக்கண்ணில்
சுதந்திர சமத்துவ ஈழம்
தெரியவில்லை
உனக்குப் புரிந்து விட்டது
உன் முகம் மலர்வதை கொண்டு
அறிந்து கொண்டேன்
இனி என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்பணியில் இப்பொழுதே
உன் பங்கை ஆரம்பித்திடு
போராட்டத்தின்
உச்சக்கட்டத்தில்
நாம் வந்து ஒன்று சேருவோம்
அதுவரையும்
மக்கள் அனைவரும்
உனது பிள்ளைகளே

- மோகனன் -

# ஈழத்தில் நடைபெறும் அடக்கு முறைகளுக்கு எதிரான கண்டனக்கூட்டம்

காலம்: 9.3.85 பி.பகல் 3 மணி.

இடம்: 177, RUE DE CHARONNE
75011 - PARIS.

METRO: ALEXANDRE DUMAS.

பாசிச அரசின் பாதகச் செயல்கட்கு
எதிராக அனைத்து மக்களும் திரண்டு
வருக.

TELO
EROS
EPRLF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்

வழங்கும்

★EPIC



# சங்கே முழங்கு

## கலைகலாச்சார நிகழ்ச்சி

**காலம்: 7.4.85**

விபரங்கட்கு!

E.P.I.C

10, RUE DES MARTYRS

75009. PARIS.

★ EPIC ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: தமிழ் ஈழ விடுதலைப் பேரவை ( பிரான்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL MURASU

UNISSEZ VOUS TOUS LES TRAVAILLEURS ET LES NATIONS OPPRIMEES

MURASU- 3 OLY- 5

MARS - 1985




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL



*LE GOUVERNEMENT DE SRILANKA ET UNE SOLUTION POLITIQUE POUR LE PEUPLE D'EELAM*

*Le président de la République de Srilanka et le gouverneur militaire de la force M.J.R.Jeyawardene faisait savoir qu'une solution politique ne pourra pas avoir lieu jusqu'à l'annéantissement total de l'action pour la liberté des Tamouls. En poursuivant ils ont affirmé qu'ils considèrent l'action de liberté de Tamoul comme un acte de terrorisme, et il veille et en même temps prend la mesure de supprimer la population d'Eelam.*

*Aussi ils ont fait savoir qu'ils n'auront pas le pourparlers avec aucun des leaders de Tamouls, jusqu'à ce que la paralysie de l'aide militaire récemment formé sous le banier dit le Front Uni.*

*Le gouvernement fasciste de Srilanka, sans respecter la justice et le droit de lutte du peuple Tamoul, faisait son possible de renforcer les forces de sécurité dans le but de supprimer en Eelam même, la nation Eelam.*

*En même temps, le gouvernement refuse de connaître qu'il y a des territoires dits Tamouls; de cette raison il introduit des Singhalais armés dans les régions Tamouls.*

*Le peuple d'Eelam combat contre le neo-colonisme Singhalais et à la fois, chauviniste et fasciste, dans le but d'obtenir leur liberté, leur liberté Nationale. Pourtant le gouvernement de Srilanka ne souhaite pas une solution politique et detourne vers une solution militaire.*

*Dans cette circonstance le peuple qui respecte les droits de l'homme et du citoyen, qui est ouvert pour soutenir le peuple opprimé, comme celui de Srilanka, nous leur demandons de bien vouloir apporter leur solution au peuple Tamoul, qui lutte pour avoir sa liberté et par conséquence de vouloir créer un état séparé, gouverné, geré et présidé par les Tamouls.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LE GOUVERNEMENT IMPLANTE DES COLONIES SINGHALAISES, ARMEES DANS LES REGIONS D'EELAM

Le gouvernement décidait d'implanter de colonies Singhalaises armées dans les régions dites predominantes Tamouls, soient les régions Nord et Est. Il est à rappeler et à souligner que l'implantation des colonies aidée par l'état dans les régions Nord et Est, il y avaient les attaques des Singhalais contre les villages Tamouls, secourues par les forces de sécurité.

Le gouvernement donne d'entrainement, manipulation des armes aux Singhalais à Negambo et les environs, dans le but d'implantation des colonies Singhalaises dans les régions de Mullaitivu, Kokilai et Nayaru.

Le 11 janvier 1985 à Poovarasankulam M.S.Kanapathipillai (ex président du conseil municipal) a été tué par balle dans sa demeure et son fils aussi a été tué par balle dans la boutique dependance de la maison. Cette élimination de personnes a été encouragé par les forces de sécurité aux Singhalais portant d'armes.

## DEUX AUTRES PECHEURS INDIENS DESCENDUS PAR LA MARINE SRILANKAISE

Deux autres pêcheurs indiens ont été tués par balles par la marine Srilankaise sur le territoire indien le 14 février 1985.

Les pêcheurs de Rameswaram ont manifesté contre les atrocités de la marine Srilankaise et les habitants de Rameswaram en Inde ferment leurs boutiques pendant cette manifestation, en signe de mécontentement.

Après cet incident, le premier ministre de l'Inde M.Rajiv Gandhi a pris le mesure pour proteger les pêcheurs Indiens dans l'étroite de palk en renforçant le contrôle naval dans cet endroit.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LES FORCES ARMEES DEMOLISSENT TEMPLES ET EGLISES DES REFUGIES

L'armée Srilankaise et de la Police commence maintenant à faire exploser par les moyens de bombe et démolissent les Temples Hindous et puis les églises se situent dans les régions Nord et Est du pays.

Le 31 janvier '85 à Kirankulam dans le département de Batticoloa une troupe de police a démoli un temple Hindou.

Auparavant un temple Hindou à Kirankulam a été dommagé par les forces armées en janvier 1985 et puis le père supérieur a tombé sous les balles.

Il est a noter que pour la destruction des lieux saints les canons ont été utilisés et dommageait le 9 avril 1984 une église et en même temps un prêtre catholique a été tué par les balles des canons le 6 janvier 1985 à Vankalai à Mannar.

Il est très claire que le gouvernement prend cette mesure en vue de supprimer la totalité de la population parlant le Tamoul.

## ANCIEN PARLEMENTAIRE EST ETE ARRETE

Le 10 février 1985 M.Thangathurai, ancien parlement de Muthur et ancien président du Conseil de développement de Trincomalee a été arrêté par les forces de sécurité. Il est à croire qu'il a été détenu au porte de police de Trincomalee.

M.Thangathurai a été un des leaders de Front-Libération Uni des Tamouls (TULF) et puis autres leaders sont aussi en danger face au régime fasciste du gouvernement de Srilanka, qui on le sait après l'échec du conférence de la Table ronde, qui a duré une année, dans le but de la recherche de la solution en ce qui concerne le problème Tamoul, un problème dit National.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CENSURE DE LA PRESSE DANS LES ACTIONS ETUDIANTS DANS L'UNIVERSITE

Les activités d'étudiants de l'université et puis autres Institutions éducatives sont mise sous un contrôle très rigide sous forme de censure. Cette mesure imposé aux Universités, suppose la suppression des voix des mouvement d'étudiants en Srilanka.

Le gouvernement procède à des restruction des associations d'étudiants. La majorité d'étudiants Singhalais de divers mouvements ont manifesté dans les rues de Colombo le 13 février 1985, aux quels ils ont été chargés par des batons. 28 étudiants l'Université ont été arrêtés et detenus au porte de Police.

La population du Sud aussi à leur tour montait leur ton contre le gouvernement en ce qui concerne la manière de repression.

Il est à noter que la censure rigide est pratiqué pour faire disparaître les nouvelles difusées en ce qui concerne la lutte d'Eelam force de libération lancée contre les forces armées Srilankaise.

POUR TOUTES LES CORROSPONDANCES

L'EDITEUR
TAMOUL MURASU
CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM
10,RUE DES MARTYRS
75009-PARIS
FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LA MARINE FAIT FEU A UN BATEAU TRANSPORTANT LES REFUGIES A MYLIDDY

Un bateau se dirigeait avec 23 personnes à son bord de Myliddy (dans le département de Jaffna) vers l'Inde, a été pilonné par la marine nationale. Dans cette intervention une jeune fille Vijayaluxmy Perumal âgée de 15 ans a été tué et 3 autres personnes ont été gravement blessées. Parmi les blessés il y a un garçon âgé de 10 mois, blessé au ventre et dû être admis à l'hôpital.

Excepte la disparue les autres ont été livrés à la garde côtière de la marine. Pendant l'interrogatoire on pouvait savoir qu'à cause de défaillance de leur pêche dûe à l'interdiction, dictée par le gouvernement dans la zône interdite, ils ont dû chercher à se refugier en Inde.

La famille perdant leur fille dans cette traverse a dû surmonter des difficultés pendant le mois de juillet en 1983 durant la violence et du se rendre à Jaffna pour leur survie.
Les tamouls de Srilanka auront dû faire face à des traitements dangereux et leur vie noemale est perturbée.

## PLUS DE REFUGIES VERS L'INDE PAR BATEAU

A partir de Pesalai dans le département de Mannar et Valvettithurai du département de Jaffna, nombreux réfugiés quittaient Srilanka pour se rendre en Inde pendant le mois de février. Après les atrocités d'aimée dans le département de Mannar, beaucoup de Tamouls ont quitté leurs maisons pour se réfugier dans la fôret et en même temps nombreux parmi ceux-ci se rendaient en Inde par bâteau.

Le 15 février '85, 400 Tamouls réfugiés ont atteint Inde Rameswaram, et dans ce court temps à peu près 5000 réfugiés Tamouls ont atteint Sud de l'Inde. Le gouvernement de Srilanka force et par conséquence chasse les Tamouls de leur pays dit traditionnel, et à la place le peuple avec les Singhalais.

Le gouvernement chauvinist de Jeyawardene pratique les méthodes d'Israël en ce qui concerne les implantation des colonies comme dans l'ouest de Palestine.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 PERSONNES PERIES DANS LES CAMPS DE REFUGIES A MULLATIVU

Il est parvenu que la plus part des réfugiés ont du faire face à la famine et maladie dans 16 camps de réfugiés dans le département de Mullaitivu.

A peu près 8500 réfugiés se trouvent dans les camps de réfugiés dans le département de Mullaitivu et 22 personnes ont succombé à la diarrhée.

Le gouvernement néglige l'état de réfugiés et ne donne pas de l'aide dans les domaines nourriture et medicament.

De l'autre côté le gouvernement Srilankais fournit les armes aux jeunes Singhalais, et les envoie dans la région de Mullaitivu quand l'armée pour chasse les Tamouls.

## LA REGION DE MANNAR SOUS LES SEVERES ATROCITES DE L'ARMEE

Le département de Mannar est en département supplétif de la région Singhalaise et le gouvernement a mis sur pied un plan de chasser les Tamouls des villages du département de Mannar.

A cause des attrocities non décrirables, les tamouls sont obligés de quitter le département de Mannar. Le 4 décembre, 1984, seulement dans les villages de Murungan, Uylankulam et Prapankulam 100 maisons, 13 boutiques, 9 tractors, 1 voiture, 1 camion et 1 motorcycle ont été incendiées. Les bijoux et de biens valeureux ont été pillés.

Après le retour des pêcheurs Indiens, les forces de sécurité ont tué 107 innocents Tamouls de la région de Mannar.

A l'heure actuelle plus de centaines de Tamouls, vivant sur la route de Mannar-Andalankulam, abondonnent leurs maisons à 2H00 du matin, pour échapper à des atrocités de l'armée, fuyant dans les fôrets.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CIVILISATION DE SRILANKA



PUBLIE PAR

CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM (FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org